# இளவேனில்



கேசி தமிழ் மன்றம்

இதழ் 28 - ஆடி 2025

Ilavenil - Casey Tamil Manram Inc - ISSN 2200-789X

# இளவேனில்

இதழ் 28 - ஆடி 2025

© கேசி தமிழ் மன்றம்


## ஆசிரியர் குழு
சாந்தி சிவகுமார்
தாமரை மதியழகன்
ஜேகே
கேதா
பாலா
சரணியா சத்தியன்

## படங்கள் செயற்கை நுண்ணறிவு வடிவமைப்பு
கேதா

## உள் வடிவமைப்பு
சி ஜெயானந்தன்


---


## *Ilavenil*

*Issue 28 – July 2025*

*© Casey Tamil Manram Inc*
*ISSN 2200-789X*


***Editorial Team***
*Shanthi Sivakumar*
*Thamarai Mathiyalagan*
*JK*
*Ketha*
*Bala*
*Saraniyah Saththiyan*

***Images AI Illustration***
*Ketha*

***Design and Layout***
*S Jeyananthan*


***editor@caseytamilmanram.org.au***

இந்த இதழில் நீங்கள் கடக்கப்போகும்
அவளது வாழ்க்கைக்கதையின் கதவுகளை
இந்த ஒரு வரி சாவி கொண்டு
கண்டுபிடியுங்கள்

**அவள்**

தந்தைக்குத் தன்னம்பிக்கை தந்தாள்
தத்தெடுத்த நாட்டில் தன்னிடம் தெரியாமல் தடுமாறினாள்
அவளிடம் கேட்காமல் வந்த வாழ்க்கையை அவனுடன் தொடங்கினாள்
அவனை முழுமையாக அறியுமுன் முழுவதுமாகத் தொலைத்தாள்
மறுமுறை வாழ்க்கை அமையாதா என ஏங்கினாள்
மாதவிடாய் துயரத்தை யார்துணையுமின்றிக் கடந்தாள்
கேட்காமல் வந்த உயிர்க்கொல்லியை
அனைவருக்கும் சொல்லி வழியனுப்பினாள்
இன்று உங்கள் கைகளில் இளவேனிலாக
அவள்!

# பொருளடக்கம்


இரவும் கடலும் ........ 3

மழலையர் பக்கம் ........ 6

சோழர்களின் வீழ்ச்சி ........ 8

நம்பிக்கை ........ 13

ஆசிரியர் தலையங்கம் ........ 16

மௌனம் கலைவது எப்போதோ? ........ 19

The Cut Between Us ........ 22

சுந்தரர் தாண்டவம் ........ 25

மொய் விருந்து ........ 31

மரத்தின் வலி ........ 35

விவாகரத்து ........ 40

மௌனம் ........ 44


Wellbeing Through Challenging Times ........ 47

அழைப்பிதழ் ........ 51

முக்குழி அப்பம் ........ 55

புலம்பெயர் வாழ்க்கையில் நான் கண்ட நன்மை தீமைகள் ........ 59

ஆஸ்திரேலியாவில் எனது அனுபவம் ........ 63



# இரவும் கடலும்

பிரணேவ் கௌசிகன்
(வயது–9)

நான் எடுத்த முடிவுகளில் எல்லாம் இதுவே முட்டாள்தனமான முடிவு என்று நினைக்கின்றேன். என்னை நச்சரிக்கும் சகோதரங்கள், மச்சான், மச்சாளுடன் ஒரு கடற்பயணமா? அதுவும் 2 நாட்களா? எனக்கு இப்பொழுதே பயண நோய் (sea sickness) வந்துவிட்டது. இப்படி இரண்டு நாட்கள் எப்படிப் போகப் போகிறது?' என்று யோசித்தேன்

ஒரு பகற்பொழுது சலிப்புடனும் எரிச்சலுடனும் கடந்தது. இராப்பொழுதில் எனது மாமா என்னை வெளியே கூப்பிட்டார்.

அலுப்புடன் சென்றேன். "நான் உனக்கு நட்சத்திரங்களைக் காட்டப் போகிறேன்" என்றார். நட்சத்திரமா? எனக்குத் தெரியும்தானே என்று நினைத்துக் கொண்டே வெளியே போனேன்.

நான் மேலே பார்த்தேன். வானம் இவ்வளவு அழகானது என்று ஏன் எனக்கு முதலே தெரியவில்லை என்று யோசித்தேன். மாமா எனக்கு ஒரு நட்சத்திரக் கூட்டத்தைக் காட்டி "இது தான் பெருங்கரடி" என்று சொன்னார். "நட்சத்திரக்கூட்டத்தின் வரிசையில் பெருங்கரடி மூன்றாம் இடத்தைப் பிடிக்கிறது. இதில் 22 நட்சத்திரங்களிற்குப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. நான் உனக்குச் சொல்லப் போகின்ற அடுத்த நட்சத்திரக் கூட்டம் அருண்" என்று தொடரும் போது. "மாமா" என்றேன் "நான் அருண் இல்லை, வருண், அருண் மகேஷ் உடன் விளையாடிக் கொண்டிருக்கிறான்" என்று கூறினேன். சரி என்று சொல்லிக் கொண்டே அடுத்த நட்சத்திரக் கூட்டத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். "அந்த நட்சத்திரக் கூட்டம்தான் சிறுகரடி. சிறுகரடியில் ஐந்து நட்சத்திரங்களுக்குத்தான் பெயர் வைக்கப்பட்டுள்ளது. வரிசையில் 56 ஆவது இடத்தை பிடித்து வைத்து உள்ளது" என்று மாமா சொல்லி முடிக்க நானும் வாயை "ஆ" என்று திறந்து கொட்டாவி விடவும் நேரம் சரியாக இருந்தது. "இன்று இது போதும் நீ படுக்கப் போ" என்று மாமா சொன்னார். அட இவ்வளவு சுவாரஸ்யத்தையும் எனது ஒரு கொட்டாவி கெடுத்துவிட்டதே என நினைத்துக்கொண்டு அறைக்குச் சென்றேன்.

அடுத்த நாளும் எந்த ஒரு ஆர்ப்பாட்டமும் இல்லாது கழிந்தது. இரவும் வந்தது. மிகவும் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் மாமாவிடம் ஓடினேன். "நட்சத்திரம் பார்ப்போமா?" என்று கேட்டேன். நேற்று "நட்சத்திரமா எனக்கு தெரியும்தானே" என்று எண்ணியதை நினைக்கும் போது எனக்கே சிரிப்பாக இருந்தது. மாமாவும் "ஓ உனக்கு நட்சத்திரக் கூட்டத்தைப் பார்ப்பதில் அவ்வளவு ஆர்வமா?" என்று கூறி என்னை அழைத்துச் சென்றார்.

"அதோ தெரிகிறது பார், அதுதான் பெருநாய். தெற்குத் திசையில் மிகவும் தெளிவாகத் தெரிகிறது" என்று சொல்லும் போது அவரது முகம் மாறியது.

"கப்பல் ஆடியது, காற்று வேகமாக வீசியது, அறிவிப்பும் வந்தது, சூறாவளி போல் இருக்கிறது. எல்லோரும் கப்பலின் உள்ளே வாருங்கள், வெளியே நிற்பது ஆபத்தானது என்று எச்சரிக்கை வந்து கொண்டே இருந்தது. அத்துடன் எச்சரிக்கை மணியும் அடித்தது. அபாய விளக்கும் மின்னியது. எம்மைப் பயம் சூழ்ந்து கொண்டது. பல பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் எமக்கு பாதுகாப்புப் பற்றி அறிவுரைகளை வழங்கினார்கள். எனக்கு மிகவும் பயமாக இருந்தது" "ஐயோ!! நாம் திரும்ப வீட்டிற்குப் போக முடியாதா? கப்பலுடன் மூழ்கி விடுவோமோ? Titanic மாதிரி எம் கப்பலும் உடைந்து விடுமா? பிறகு எமது கதையும் படமாக வருமா? என்றெல்லாம் யோசித்துக் கொண்டேயிருந்தேன். அப்போது அம்மா "கடவுளைக் கும்பிடு எல்லாம் சரி ஆகும்" என்று சொன்னார். நானும் கடவுளைக் கும்பிட்டேன். அப்போது கப்பலின் ஆட்டம் குறைகிறது போல இருக்கிறது என்று யோசிக்க முதலே கப்பல் மீண்டும் ஆடத் தொடங்கியது. Life jacket ஐயும் Raft ஐயும் தந்து கப்பலில் இருந்து இறக்கி விடுவார்களோ என்று யோசித்தேன்" என்று மாமா சொல்லும் போது "மாமா கடைசில நீங்கள் எப்படி வீட்டிற்கு வந்தீர்கள்"? என்று குறுக்கிட்டேன்.

"அதைத்தான் சொல்லப் போகிறேன்" என்று தொடர்ந்து கூறினார் மாமா. "இந்தப்

பெருநாய் நட்சத்திரக்கூட்டத்தைப் பார்த்து என் அப்பா சொன்னார் “நாம் இப்போது தெற்குத் திசை நோக்கிப் போகிறோம். பிழையான வழி போல தெரிகிறது.” அப்போது மீண்டும் எச்சரிக்கை வந்தது. ”கப்பல் திசை மாறிப் போகிறது. ஆனால் இன்னும் சில நிமிடங்களில் காற்றின் வேகம் குறைந்து விடும். நாம் பாதுகாப்பாகத் திரும்பலாம். யாரும் பயப்பட வேண்டாம்” எனக் கூறியது. ”இதைக் கேட்டதும் நாம் வீடு செல்ல முடியும் என்ற நம்பிக்கை வந்தது. அதற்குப் பின்னர் காற்றின் வேகமும் குறைந்தது. நாம் பத்திரமாக வீடு சென்றோம். நான் எப்போவெல்லாம் பெரு நாயைப் பார்க்கிறேனோ அப்போவெல்லாம் எனக்கு இந்தச் சம்பவம்தான் நினைவுக்கு வரும்” என்று மாமா சொல்லி முடித்தார்.

எனக்கு வியப்பாக இருந்தது. “இந்த நட்சத்திரக்கூட்டத்தை வைத்து திசைகளை சரியாகச் சொல்ல முடியுமா?” என்று மிகவும் வியப்புடன் மாமாவிடம் கேட்டேன். “திசை மட்டுமல்ல! நேரத்தையும் ஏன் பருவ காலத்தையும் கூடக் கணிக்க முடியும்” என்று சொன்னார். நான் மேலும் வியப்படைந்தேன். மாமாவின் நீண்ட உரையாடலிற்குப் பின் இருவரும் தூங்கச் சென்றோம். படுக்கையில் மாமாவின் கதைகளும் நட்சத்திரத்தின் அற்புதங்களும் என்னைச் சுற்றிச்சுற்றி வந்தன. நான் கட்டிலில் இருக்கிறேனா அல்லது வானில் நட்சத்திரத்துக்கு நடுவில் இருக்கிறேனா என யோசித்தேன். நட்சத்திரங்களைப் பற்றி இன்னும் நிறையத் தெரிந்துகொள்ள வேண்டும் என நினைத்து கொண்டே அப்படியே தூங்கி விட்டேன்.

என் கனவிலும் இதே நட்சத்திரமும் கப்பல் கடலில் தத்தளிப்பதுவும்தான் வந்தது. ஆனால் நான் சென்ற கப்பலை spider man வந்து காப்பாற்றினார். Spider-Man வந்தது என் கனவில் ஒரு சூப்பர் ஹீரோ சாகசம் போல இருந்தது. ஆனாலும் கண் விழிக்கும் போது, கப்பல் கரையை அடைந்திருந்தது!. எனது கப்பல் பயணமும் மிகவும் சந்தோசமாக முடிந்தது.

**இந்தக் கதையில் ஒரு புதிர் புதைந்துள்ளது. உங்களால் முடிந்தால் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!!!**

# மழலையர் பக்கம்

### சொற்சங்கிலி விளையாட்டு


சிறுவர்களின் தமிழ் சொல்லாற்றலை வளர்த்துக்கொள்ளப் பல வழிமுறைகள் இருக்கின்றன. புத்தகங்களை வாசித்தல், மனனம் செய்தல்போன்ற வழிமுறைகள் சிலவேளைகளில் சலிப்பைத் தரக்கூடும். பொதுவாக விளையாட்டின் வழியாக மொழியைக் கற்றுக் கொடுக்கும்போது கற்றல் இலகுவானதாயும், மகிழ்ச்சியானதாயும், மனதில் பதியக்டியதாயும் அமைகிறது. அவ்வாறான ஒரு விளையாட்டுத்தான் சொற்சங்கிலி. ஏழு வயது சிறுவனான ஹரிணீவ், தனது ஆறாவது வயதிலிருந்து இந்த விளையாட்டை விளையாடி வருகிறார்.

### சரி இதை எப்படி விளையாடுவது?

உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு சொல்லில் தொடங்குங்கள். அதன் கடைசி எழுத்தை முதலெழுத்தாகக்கொண்டு அடுத்த சொல்லை எழுதுங்கள். அதன் கடைசி எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு அடுத்த சொல்லைத் தொடருங்கள். ஒரு அளவிற்குமேல் சங்கிலியைத் தொடர முடியாவிட்டால் புதிய சங்கிலியைத் தொடங்குங்கள். ஒரு சங்கிலியில் வந்த சொல் இன்னொரு சங்கிலியில் வரமுடியாது. ஹரிணீவ் தான் உருவாக்கிய சில சொற்சங்கிலிகளை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.



ஹரினீவ் கௌசிகன்
(வயது 7)




*ஐந்து வயாதான ஆதிரா தனது முதலாவது சொற்சங்கிலி முயற்சியைப் பகிர்ந்துள்ளார்*




**ஆதிரா**
**(வயது 5)**

**நாங்களும் சொற்சங்கிலி விளையாடுவோமா?**
**உங்கள் சொற்சங்கிலிகளை**
**எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**



# சோழர்களின் வீழ்ச்சி



துவாரகன் சந்திரன்

அன்றைய இரவின் வானம் மர்மத்தாலும், சதியாலும் சூழ்ந்திருந்தது. சோழ சாம்ராஜ்யத்திற்குள் ஆழமாக, பண்டைய கோட்டையின் பிரமாண்டமான மண்டபங்கள் அமைதியாக நின்றன. பேரரசின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ரகசிய சதித்திட்டத்தை அந்த மண்டபங்களின் சுவர்கள் எதிரொலித்தன.

சுந்தரசோழனின் மகன்,

மாவீரன் ஆதித்தகரிகாலன் வீரமும் கௌரவமும் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்திருந்தான். ஆனால் அதற்குக் கீழ், அவருக்கு நெருக்கமானவர்களின் துரோகங்களாலும், சூழ்ச்சிகளாலும் அவருடைய மனம் குழம்பி இருந்தது. அவர்களில், சோழ நாட்டின் தளபதியும் ஆலோசகரான பெரிய பழுவேட்டரையர், கரிகாலனின் ஒவ்வொரு அடியிலும் நிழலாகத் தெரிந்தார். அரியணைக்கும், அவரது சோழ வம்சத்தின் எதிர்காலத்திற்கும் அச்சுறுத்தலாக இருந்தார்.

தன்னை எதிர்த்து எவரும் இருக்கக் கூடாது என்பதைக் கரிகாலன் அறிந்திருந்தான். சோழ சாம்ராஜ்ஜியம் செழிக்க வேண்டுமென்றால், பெரிய பழுவேட்டரையர் ஒழிக்கப்பட வேண்டும். ஆனால் வெளிப்படையாக இப்படி ஒரு காரியம் செய்வது அரிதல்ல. கழுகு தனது இரையைக் காப்பதுபோல், பெரிய பழுவேட்டரையரைச் சுற்றி காவலர்கள் எப்பொழுதும் இருப்பார்கள். இவர்களைத் தாண்டி, தடயம் இல்லாமல், சந்தேகம் எழாமல் அவரை வீழ்த்துவதற்கு கரிகாலன் திட்டமிட்டான்.

ஒர் நள்ளிரவு, சோழ நாடு உறக்கத்தில் இருக்கும் பொழுது, அரச அரண்மனையின் மங்கலான வெளிச்சம் கொண்ட அறைகளில், கரிகாலன் ஒருவருடன் அமர்ந்திருந்தான். மிகவும் தந்திரமான, துல்லியமான, நம்பிக்கைக்குரியவரான அவருடைய நண்பன், புகழ் பெற்ற ஒரு கொலைகாரரான வல்லவராயன் வந்தியத்தேவன். மிகவும் சாத்தியமற்ற பணிகளைக்கூட முடிப்பதில் சிறந்த வீரன் என்பதினால் மட்டும் அவரை இங்கு கரிகாலன் அழைத்து வரவில்லை. அவசியம் என்பதினால், இது வந்தியத்தேவனால் மட்டும் முடியும் என்பதினால்.

வந்தியத்தேவன் நாற்காலியில் சாய்ந்து, குழப்பத்தில் கரிகாலரைப் பார்த்தான். "இளவரசே, நீங்கள் என்னிடமிருந்து எதிர்பார்ப்பது சாதாரண விடயம் அல்ல. சோழ ராஜ்ஜியம் போர்களுக்கு புதிதல்ல, ஆனால் நீங்கள் கேட்பது கொலை! இது ராஜ துரோகம். அதுவும் வேறொரு ராஜ்ஜியத்தின் மன்னரோ சிற்றசர்களோ இல்லை. பெரிய பழுவேட்டரையரை. சோழ நாட்டின் தளபதியை"

ஆதித்த கரிகாலனின் கண்கள் தீபோல் எரிந்தன. வந்தியத்தேவனை நோக்கி முன்னோக்கி சாய்ந்தான். அவன் குரலைத் தாழ்த்தி, "பெரிய பழுவேட்டரையர் சிம்மாசனதிற்கு ஆசைப்படுகிறார். ஆனால் அவர் ஒரு நோய். அது நம் அனைவரையும் அழிப்பதற்கு முன்பு அதை அகற்ற வேண்டும். அவரை நெருங்கிச் செல்லக்கூடிய, சரியான தருணம் பார்த்து தாக்கக்கூடிய, எந்தத் தடயத்தையும் விட்டுச் செல்லாத ஒருவர் எனக்குத் தேவை. வந்தியத்தேவா, நான் உன்னை நம்புகிறேன். உன் திறமை எனக்குத் தேவை." ஆதித்த கரிகாலன் தன் ஆசனத்தில் இருந்து எழுந்து தன் அருகில் இருந்த ஜன்னல் பக்கம் சென்றான். அந்த ஜன்னல் வழியாக முழு சோழ நாட்டையும் பார்த்தான். இரவிலும் வெளிச்சத்துடன் இருக்கும் நாடு. அவன் கண்கள் ஒவ்வொரு விளக்கையும் தொட்டுச்சென்றது. "பார் வந்தியத்தேவா, இந்த நாட்டின் அமைதியைக் கேள். இந்த அமைதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றால், பழுவேட்டரையரைப்போல சூழ்ச்சியான, தந்திரமான சிந்தனைகள் இருக்கும் ஒருவரை வைத்துக்கொண்டு செயல்பட முடியாது. அது ஒரு கொடிய நோயோடு வாழ்வதுபோல் வந்தியத்தேவா" என கரிகாலர் விளக்கினான்.

கரிகாலனின் வார்த்தைகளில் உள்ள கனத்தை உணர்ந்த வந்தியத்தேவன் புருவத்தை உயர்த்தி, "ஆனால் நான் ஏன்? இதற்காக நீங்கள் நிச்சயமாக நூறு பேரை அனுப்பலாம். உங்கள் படையின் பலத்தை ஏன் நம்பக்கூடாது?"

இளவரசரின் முகத்தில் ஒரு தெளிவு. வந்தியத்தேவனை நாம் எமது வலையின் அருகே கொண்டு வந்திட்டோம் என ஒரு சிந்தனை. "ஏனென்றால் இது சத்தம் இல்லாமல் செய்யப்பட வேண்டும். பழுவேட்டரையர் நமது நோக்கங்களை அறிந்தால், முழு ராஜ்யமும் வீழ்ந்துவிடும். உங்களைப் போன்ற ஒரு மனிதரால் மட்டுமே எந்த அடையாளத்தையும் விட்டுச் செல்லாமல் நிழலோடு நிழலாக மறைய முடியும்" என இளவரசர் வந்தியத்தேவரை சமாதானப்படுத்தினான்.

வந்தியத்தேவன் ஒரு கணம் யோசித்து விட்டு, தலையசைத்தான். "நான் இதை செய்து முடிக்கிறேன் இளவரசே. ஆனால் நிபந்தனைகள் இருக்கும். ஊதியம் பணிக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். மேலும், பழுவேட்டரையரின் வீழ்ச்சிக்குப் பிறகு ராஜ்யம் நிலையாக இருப்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்."

ஆதித்த கரிகாலன் கையை நீட்டி ஒப்பந்தத்தை முடித்தான். "வந்தியத்தேவா, உனக்கு மிகுந்த வெகுமதி கிடைக்கும் என்று நான் உறுதியளிக்கிறேன், இது மட்டுமல்லாமல், இந்த செயல், சோழ வம்சத்தின் எதிர்காலத்தையும் உறுதி செய்யும். பழுவேட்டரையரின் மரணம் வளமான ஆட்சியை நோக்கிய முதல் படியாக இருக்கும்".

கரிகாலன் வந்தியத்தேவரிடம் அருகே சென்று அவருடைய திட்டத்தை கூறினான். "இன்றிலிருந்து மூன்றாம் நாள், சோழ நாட்டின் சிற்றரசர்கள் எல்லாம் ஒரு ரகசிய சந்திப்பொன்றைத் திட்டமிட்டிருக்கிறார்கள். அந்த சந்திப்பிற்கு நானும் போக வேண்டும். அங்கேதான் இந்தச் சம்பவம் நடக்க வேண்டும். சிற்றரசர்கள் முன்னால் பெரிய பழுவேட்டரையர் வீழ்ந்தால்தான் அவரில் உள்ள நம்பிக்கை வீழும். அப்போது தெரியும்."

இந்த வேலையின் கனத்தை இருவரும் புரிந்துகொண்டனர். பெரிய பழுவேட்டரையர் சாதாரண மனிதர் அல்ல. ராஜ்ஜியத்தின் மீதான அவரது விசுவாசம், கேள்விக்குரியதாக இருந்தாலும், அவருக்கு அது கணிசமான செல்வாக்கை அளித்தது. இவர் வீழ்ந்தால் சோழ நாடு முழுவதிலும் ஒரு அதிர்ச்சி அலை பரவும். ஆனால் கரிகாலன் தனது அரசு நிலையை உறுதிப்படுத்தவும், சரியான அரச வாரிசாக தனது இடத்தை உறுதி செய்யவும் இதுவே ஒரே வழி என்று நம்பினார்.

சோழ சாம்ராஜ்யத்தின் தலைவர்கள் கோட்டையின் மையப்பகுதிக்குள் ஒரு தனிமையான மண்டபத்தில் கூடினர். அந்த அறை, நிழலும் மங்கலான வெளிச்சமும் நிறைந்து இருந்தது. அந்த அறைக்குள் ஒரு பெரிய மேசை இருந்தது. அதைச் சுற்றி சோழ சிற்றரசர்கள் அமர்ந்தனர். அவர்களுக்கிடையே முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். கதவாக அமைக்கப்பட்ட புத்தக அலமாரி திறந்தது. இருளில் இருந்து பெரிய பழுவேட்டரையர் தோன்றினார். சில சிற்றரசர்கள் எழுந்து மரியாதை செலுத்தினர், சிலர் அவரை பார்த்துவிட்டு அவர்களுக்கிடையில் இருந்த உரையாடலை தொடர்ந்தனர். பழுவேட்டரையர் இதை அமைதியாக கவனித்தார். இது நடந்து சில நேரத்தில் ஆதித்த கரிகாலன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். இவரைக் கண்டதும் எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தி வணக்கம் வைத்தனர். ஆனால் பழுவேட்டரையர் இருக்கையில் அமர்ந்திருந்தார்.

"இன்றைய கூட்டத்தின் முக்கியத்துவத்தை நாம் அனைவரும் புரிந்து கொள்வோம் என்று நான் நம்புகிறேன்," என்று கரிகாலன் தனது குரலில் உறுதியாகத் தொடங்கினான். "நமது ராஜ்ஜியத்தின் எதிர்காலம் நாம் இங்கு

எடுக்கும் முடிவுகளைப் பொறுத்தது."

சோழ சாம்ராஜ்யத்தின் தலைவர்கள் தலையாட்டினர், அவர்களின் முகங்களில் இளவரசனுக்கான மரியாதையும் பயமும் கலந்திருந்தன. ஆனாலும், யாரும் அவரது அதிகாரத்தை கேள்வி கேட்கத் துணியவில்லை. ஆனால் தளபதியின் கண்கள் கரிகாலனை விட்டு ஒருபோதும் விலகவில்லை. ஒரு கழுகைப் போலவே கரிகாலரைப் பார்த்துக்கொண்டிருந்தார். சிற்றரசர்கள் அவர்களுடைய வாதங்களை முன் வைக்கும் போது பழுவேட்டரையர் கரிகாலருடைய கண்களைப் பார்த்து கொண்டிருந்தார். இளவரசரின் பார்வையில் ஏதோ ஒரு மாற்றம் தெரிந்தது, ஆனால் அது என்னவென்று சரியாகக் கணிக்கமுடியவில்லை.

விவாதம் மேலும் தீவிரமடைய, வந்தியத்தேவன் அமைதியாக மண்டபத்திற்குள் நுழைந்து, நிழலோடு நிழலாக தடையின்றிக் கலந்தான். அவனது கண்கள் பழுவேட்டரையர் மீது நிலைத்திருந்தன, அவர் அந்த முதியவரை துல்லியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். இடைகிடையில் ஆதித்த கரிகாலனின் கண்களை பார்த்துக்கொண்டிருந்தான். அவனும் சரியான தருணத்தை எண்ணிக் காத்திருந்தான்.

நாட்டின் நிலமையை பற்றிப் பேசக் கரிகாலன் எழுந்தான். "ராஜ்ஜியத்தில் அரச ஆசனத்தைப் பற்றியதான கதைகள் நிலவுவதாக பல செய்திகளைக் கேள்விப் பட்டிருக்கிறோம், ஆனால் இந்தக் கதைகளை எதிர்க்க நாம் இன்னும் வலுவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். பெரிய பழுவேட்டரையர் எப்போதும் விசுவாசத்தையும் வலிமையையும் பற்றிப் பேசியுள்ளார், ஆனால் அவரது செயல்கள் வேறுவிதமாக இருக்கிறது."

தலைவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளும்போது காற்றில் லேசான மாற்றம். ஒரு நுட்பமான பதட்டம். பழுவேட்டரையரின் பார்வை கடினமாகியது. "இளவரசரே, நீங்கள் ஆபத்தான நீரில் மிதக்கிறீர்கள். ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் நமது ஒற்றுமையைக் குலைக்க நாம் அனுமதிக்கக் கூடாது.

கரிகாலன் சிரித்தான், அவன் கண்கள் தளபதியின் கண்களுடன் மோதிக் கொண்டன. "சில நேரங்களில், மிகவும் ஆபத்தான துரோகிகள் உங்களுக்கு மிக அருகிலே இருக்கவும் வாய்ப்பு உள்ளதல்லவா பாட்டா." பழுவெட்டரையரின் கண்கள் குறுகின. அந்த நேரத்தில், வந்தியத்தேவன் ஒரு நிழலைப் போல நகர்ந்து, அமைதியாக அறையைக் கடந்து சென்றான். ஒரு தலைசிறந்த கொலையாளியின் பயிற்சி பெற்ற திறமையுடன் ஒளிந்தான். அதே நேரத்தில் மண்டபத்திற்க்கு வெளியே ஒரு பெரிய சத்தம் கேட்டது. எல்லோரும் அவர்களை அவர்கள் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். காற்றில் லேசான மாற்றத்தை உணர்ந்தார்கள். ஆனால் அவர் எதிர்வினையாற்றுவதற்கு முன்பே, கருமை நிற உடை உடுத்தியவர்கள் மண்டபத்திற்குள் நுழைந்தார்கள். சிற்றரசர்களை வெட்ட முயன்றார்கள். மண்டபம் முழுவதும் பரபரப்பானது. இதற்கிடையில் ஆதித்தகரிகாலன் வந்தியத்தேவனின் கண்களை பார்த்து பழுவேட்டரையரைப் பார்த்தான். வந்தியத்தேவன் இதைப் புரிந்து நகர்ந்தான்.


கடம்பூர் கோட்டையைச் சுற்றி அடர்ந்த, பழங்கால மரங்களின் மீது நீண்ட நிழல்களைப் பரப்பி, சூரியன் மறையத் தொடங்கியது. எப்போதும் வேகமான மற்றும் அமைதியான உருவமாக இருந்த வந்தியத்தேவன், கோட்டையின் தூண்களுக்கு இடையே ஒரு நிழல் போல நகர்ந்தான், அவனது கண்கள் ஆழ்ந்த உறுதியுடன் எரிந்தன. மங்கலான ஒளியில்

மின்னிய அவனது வாள், தாக்கத் தயாராக இருந்தது. அவனது இலக்கு: சோழப் பேரரசிற்கு, முதுகைத் திருப்பிய துரோகி பெரிய பழுவேட்டரையர். இன்றிரவு, அவரது துரோகத்திற்கான விலை இரத்தத்தால் செலுத்தப்படும்.

வந்தியத்தேவன் மின்னல் வேகத்தில் தாக்கினான். கொலையாளியின் மார்பில் காலால் உதைத்த தருணம், மரணம் அவன் எதிரில் நின்றது.

கரிகாலன் அசையாமல் நின்றான். எப்போதும் உறுதியாக இருக்கும் வந்தியத்தேவனின் முகத்தில் குழப்பம் நிறைந்தது. பழுவேட்டரையருக்கும் அதே குழப்பம். “என்னை எதிர்த்து நின்ற இளவரசரா என்னைக் காத்து நிற்பது?” என நினைத்தார் தளபதி. “அரசே உங்க-” என வந்தியத்தேவன் தொடங்கும் போது கரிகாலன் தனது வாளால் வந்தியத்தேவனின் கழுத்தை வெட்டினான். கரிகாலனின் கண்களில் ஒரு தடுமாற்றமும் இருக்க வில்லை.

கரிகாலன் தன் காலை பின்வாங்கினான், அவனது கத்தி இரத்தத்தால் நனைந்து அமைதியையும் மரணத்தின் வாசனையையும் மட்டுமே விட்டுச் சென்றது. தலைவர்கள் உறைந்து போய் அமர்ந்திருந்தனர், அவர்களின் பார்வை கரிகாலனை நோக்கி இருந்தன. இந்த சம்பவத்தில் இருந்து பெரிய பழுவேட்டரையரின் நம்பிக்கையை கரிகாலன் வென்றான். அத்தோடு, ரகசியக் கூட்டம் முடிவுக்கு வந்தது, இனி பெரிய பழுவேட்டரையருக்கும் ஆதித்தகரி காலருக்கும் உறவு மாற்றப்பட்டது. நம்பிக்கையும் விசுவாசமும் குழப்பத்தில் மிதந்தது.



# நம்பிக்கை



மோஷிகா
பிறேமதாசா

"சொறி சந்திரு... நாங்கள் இத்துடன் உங்களை வேலையிலிருந்து நீக்குகின்றோம். நான் நிர்வாகத்துடன் பலமுறை பேசிப் பார்த்தேன் ஆனால்..." என்று மென்மையான குரலில் மேலாளர் சொன்னார்.

அந்த வார்த்தைகள் சத்தமின்றி விழுந்தாலும், சந்திருவின் மனதைக் கிழித்து விட்டது. அவன் மௌனமாக மேலாளரின் கண்களைப் பார்த்தான். அப்போது

சில நினைவுகள் அவனைத் தழுவின - மேலாளருடன் சேர்ந்து கடுமையாக உழைத்த தருணங்கள், பாராட்டுப் பெற்ற சந்தோஷங்கள், மற்றும் எதிர்காலம் குறித்துக் கொண்டிருந்த நம்பிக்கைகள்.

இப்போது அந்த நம்பிக்கைகள் அனைத்தும் மங்கிவிட்டது. மேசையின் அப்புறம் அமர்ந்திருந்த மேலாளர் பேசிக்கொண்டிருந்தார். ஆனால் சந்திருவுக்கு ஒன்றும் கேட்கவில்லை. அவனது உள்ளம் வெறுமையாகி, ஒரு மூச்சு விட அவன் திரும்பியும் பார்த்தான். இங்கே அவன் பயணம் முடிந்துவிட்டது என்ற உண்மை, மெதுவாக அவன் மனதில் பதிந்தது.

ஆறு வயது சித்திரா அவன் கண் முன் வந்து சென்றாள். அவள் பள்ளிக்கூடக் கட்டணத்தை எப்படிக் கட்டப் போகிறேன் என எண்ணினான்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த பிறகு, சந்திரு மெதுவாக எழுந்தான். மனதிலிருந்த தளர்வை வெளிக்காட்டாமல் மெல்ல உரைத்தான்.

"நன்றி சார்." என்றான். அவன் வார்த்தைகள் சளைக்காமல் வர முயற்சிக்கும் போது குரலில் ஒரு மெலிவு இருந்தது. மேலாளர் சிறிது தவித்து, ஒரு மென்மையான சிரிப்புடன் கையழுத்தினார்.

அலுவலகம் முழுவதும் சத்தமின்றி இருந்தது. சிலர் அவனைத் தொலைவிலிருந்து பார்த்தார்கள். சிலர் திரும்பிப் பார்க்கத் துணியவில்லை. தனது பையை எடுத்து வெளியே சென்றான்.

வாசல் நோக்கி நடந்தபோது, ஒரு நிமிடம் நின்று அந்த இடத்தைப் பார்த்தான். பல ஆண்டுகளாகப் பார்த்து வந்த அவனின் அலுவலகத்தின் நிழல் இன்று அவனை இரையாக்குவதுபோல் ஒரு உணர்வு. அந்த கட்டடத்தின் அடுக்கு மாடிகளும் பிரம்மாண்டமும் ஒரு பெரிய மிருகம்போல் அவன் மனதில்.

ஒரு ஆழமான மூச்சை இழுத்து, மனதைக் கொஞ்சம் உறுதியாக்கிக்கொண்டு, கதவைத் தள்ளி வெளியேறினான். சிற்றுந்தைச் சேர்ந்த பின்பு சந்திருவுக்கு சித்திராவைப் பள்ளியிலிருந்து ஏத்தவேண்டும் என்ற நினைவு வந்தது.

மாலைச் சூரியன் மெதுவாகக் கீழிறங்கிக்கொண்டிருந்தான். அங்கு ஓரளவு வெப்பமும் ஒளியும் சேர்ந்து ஒரு அமைதி நிலவியது. சந்திரு பள்ளிக்கூட வாசலுக்கு நடந்து வந்தார். கால்கள் மெதுவாக நகர்ந்தன. உள்ளம் மட்டும் பல கேள்விகளுடன் ஓடிக்கொண்டிருந்தது.

அவனது மனதில் இன்னும் வேலை இழந்த அந்த தருணம் ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் இப்போது அந்த எண்ணங்களை ஒதுக்கித் தள்ளிக்கொண்டு, சித்ராவைச் சந்திக்கிறேன் என்ற எண்ணம் மட்டுமே மனதைப் பிடித்திருந்தது.

வாசலிலிருந்து குழந்தைகள் பரபரப்பாக வெளியேறி ஓடிக்கொண்டிருந்தனர். சித்திரா தனது பையில் புத்தகங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு வெளியே வந்தபோது, அவள் முகத்தில் அந்த நாள் முடிவின் சோர்வும், அப்பாவைக் காணும் மகிழ்ச்சியும் கலந்து இருந்தன.

“அப்பா!” என்று அவள் அழைத்தபோது, சந்திருவின் முகம் மலர்ந்தது.

"வா செல்லம்... இன்று பள்ளி எப்படி இருந்தது?" என்று மெதுவாகக் கேட்டார்.

அவள் பேச ஆரம்பித்தாள். ஆசிரியர் கற்றுக்கொடுத்தது, நண்பர்களுடன் விளையாடியது, அனைத்தையும் மூச்சு விடாமல் தொடர்ந்து சொல்லிக்கொண்டே வந்தாள்.

சந்திரு கவனமாக அவளது கைகளைப் பிடித்தான். அவளுடன் நடக்கிற போதே, உள்ளம் இன்னும் குழப்பமடைந்திருந்தது. அடுத்து என்ன செய்யலாம் எனும் எண்ணம் தொடர்ந்து மனதில் எழுந்துகொண்டே இருந்தது.

மனம் முழுதும் கனமான சுமையுடன் சிற்றுந்தை திருப்பியது. அப்போது வீதியின் ஓரத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு தொழிலாளி மேல் அவன் கவனம் திரும்பியது. ஒரு காலில் ஊன்றிக் கொண்டுவந்து கீழே கிடந்த குப்பைகளை சேகரித்து கொண்டிருந்த ஒரு மாற்றுத் திறனாளியைப் பார்த்தான்.

அந்த காட்சி சந்திருவின் உள்ளத்தில் ஏதோ ஓர் நம்பிக்கையைத் தூண்டியது. தோல்வி நிரந்தரமல்ல. முயற்சி தொடரும் வரை வாழ்க்கையில் நிச்சயம் ஒரு வழி பிறக்கும். சந்திருவுக்கும் வாழ்க்கை மாறும்.

# ஆசிரியர் தலையங்கம்

மறுபடியும், இளவேனில் சஞ்சிகை மூலமாக உங்களுடன் உரையாடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

புலம்பெயர்ந்து வாழுகின்ற நம் தமிழ்ச் சமுதாயம் எதிர்கொள்ளும் பல சிக்கல்களில் ஒன்று, நம் இளந்தலைமுறையினரை எப்படி வழி நடத்துவது என்பது. தனியாளாய் நம் இளையவர்களின் அகப்போராட்டம் பெரும்பாலும் தாம் வாழும் சமூகத்தினுடைய அங்கீகாரத்திற்கு ஏங்குவதாகவே உள்ளது. அதற்காகப் பல முகமூடிகளை அணிய முனைவதால் ஈற்றில் அவர்களது சொந்த முகங்களும் மறைக்கப்பட்டுவிடுகிறது. தன் உண்மை முகம் எது என்ற தேடலில் தானே தொலைந்து போய், பின்னர் ஒருவாறு மீண்டெழுந்து தன்னைத் தேடிக் கண்டடைந்த பிற்பாடு, சுற்றமும் சமூகமும் தன்னை சரியாய் புரிந்துகொள்ளவில்லை என்ற ஆதங்கம் அத்தலைமுறைக்கு மேலோங்கிவிடுகிறது.

ஒவ்வொருவரும் பல முகமூடிகளை அணிந்துகொள்ளும்போது, தம் உண்மை முகங்களை வெளிக்காட்டாதபொழுது, சுற்றமும்கூட அவர்கள் பார்க்கும் முகமூடிக்குத்தான் வினையாற்றமுடியும். இது இயல்பு. புலம்பெயர்ந்த முதல் தலைமுறையினராகத் தங்களின் இழப்புகளையும் போராட்டங்களையும் துன்பங்களையும் இதுவரையில் பெரிதாக நினைக்காதவர்கள் எல்லோரும் பெற்றோராகத் தம் பிள்ளைகளைப் புரிந்துகொள்ளவேண்டிய இந்தப் புள்ளியில் தடுமாறுவதைப் பார்க்கலாம். அடையாளக் குழப்பங்களுள் வீழ்ந்து மீண்டும் எழுகின்ற தம் பிள்ளைகளை, அவர்கள் அதற்காக அவ்வப்போது தெரிந்தோ, தெரியாமலோ அணிந்துகொள்ளும் முகமூடிகளைப் பெற்றோர்களும் பெரு முயற்சியெடுத்துப் புரிந்துகொள்ளுவது என்பது புலம்பெயர் வாழ்வின் கூறுகளுள் அவசியமானதொன்று.

பிள்ளைகளின் மனவளத்தையும் மனதில்கொண்டு பெற்றோர்கள் மாறும் காலத்திற்கும் வாழும் சூழலுக்கும் தங்களைத் தகவமைத்துக்கொண்டு அவர்களுக்குத் துணை நிற்கவேண்டும். நாம் வேறொரு இடத்திற்குப் புலம்பெயருகையில் நாம் வாழ்ந்த நாட்டின் பண்பாடுகளையும் மதிப்பீடுகளையும் மறுபரிசீலனையின்றி இங்கேயும் சுமந்து திரிதல் இரு தரப்பினருக்கும் மன உளைச்சலேயே கொடுக்கும். எதிர்மறையாக அமையும். அதற்கான பலன் ஏதும் நமக்குக் கிடைக்குமா என்றால் அதுவும் இல்லை. நாம் இன்று பின்பற்றும் பண்பாடுகூட நூறு வருடங்களுக்கு முன் வேறொன்றாக

இருந்திருக்கக்கூடிய சூழலில் அவற்றைக் கட்டிக்காப்பதற்காக நாம் அத்தனை விலையைக் கொடுக்கவேண்டியதுமில்லை.

பெரும்பாலும் வீட்டிற்குள்ளும் வெளியேயும் வேறாக இயங்கும் இருவேறு வாழ்வியல்களுக்கிடையில் நம் இளம் தலைமுறை தங்களைப் பொருத்திக்கொண்டு, தாங்களும் இச்சமூகத்தின் பிரதிநிதியே என்பதை நிலைநிறுத்த எதிர்கொள்ளும் சிக்கல்கள் இலகுவானவை அல்ல. அவற்றை முதற்தலைமுறைப் பெற்றோர்கள் புரிந்துகொள்வதும் கடினம். ஆனால் முயற்சி செய்தல் அவசியம். தம் மதிப்பீடுகளிலிருந்து மாறுபடுவதாலேயே அவற்றைப் பெற்றோர்கள் மறுக்கலாகாது. இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் மதிப்பீடுகளும் வரையறைகளும் மாறுவது கால வகையினானே.

பிள்ளைகளும் தம் பெற்றோர்களின் தடுமாற்றத்தையும் பின்னடைவுகளையும் பதின் வயதுகளில் இல்லையென்றாலும் பெரியவர்களாக மாறும்போதேனும் புரிந்துகொள்ளுதல் அவசியம். பெரு மரத்தைத் தன் நிலத்திலிருந்து பிடுங்கி வந்து பிறிதொரு நிலத்தில் நட்டுவைத்து வளரும் வாழ்வு நம் பெற்றோருடையது. அது அவ்வளவு இலகுவல்ல என்பதும் அந்த வாழ்வுக்கேயான உடல் உளச் சிக்கல்கள் அவர்களுக்கு இருக்குமென்பதையும் இளையவர்கள் உணர்ந்துகொள்ளுதல் அவசியம்.

தங்களுடைய சுதந்திரமும் உரிமையும் தனித்துவமும் மிக முக்கியம் எனக் கருதும் பிள்ளைகள் சுதந்திரமாக வாழவும் பழகவேண்டும். அதனூடாக வரும் பொறுப்புகளையும் ஏற்கவேண்டும். பெற்றோருடன் சௌகரியமாக இருந்துகொண்டு, அவர்களிடமிருந்து கிடைக்கக்கூடிய அத்தனைப் பலன்களையும் அனுபவித்துக்கொண்டு, பின்னர் எந்தவித பொறுப்புகளையும் ஏற்காமல் பேச்சளவில் மட்டும் தங்கள் முற்போக்குச் சிந்தனையைக் காட்டுவது என்பது இரட்டைத் தரநிலை. தம் பெற்றோரின் பலவீனங்களில் குளிர்காய்ந்துகொண்டு அவர்களை எள்ளி நகையாடும் குழந்தைகள் தம் முகமூடிகளை ஒருகணம் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம்.

புலம்பெயர்ந்த நாட்டில் பல வருட ஓட்டத்திற்கு பின் தங்களை நிலைநிறுத்திக்கொண்டு, ஆசுவாசமடையும் தருணத்தில் இம்மாதிரி அதீத சிக்கல்களை எதிர்கொள்வது என்பது பெற்றொருக்கு வாழ்க்கை மீதான அசூயையைக் கூட்டவே செய்யும்.

சுதந்திரமாக வாழ்க்கையை நடத்த எத்தனிக்கும்பொழுது சறுக்கல்களும் வீழ்தலும் தவிர்க்கமுடியாதவை. வாழ்க்கை இவை எல்லாம் சேர்ந்ததுதான். அதை ஏற்று முன்னோக்கிச் செல்லவேண்டும்


இரு தரப்புகளும் ஒரு புள்ளியில் சந்தித்து மனம்விட்டு உரையாடுதல் வேண்டும். மற்றைய தரப்பைப் பற்றிய முழுப்புரிதல் நமக்கு இல்லை என்பதை முதலில் உணர வேண்டும். தேவை ஏற்படின் நிபுணர்களின் உதவியையும் நாடலாம். இளவேனில் போன்ற சமூக சஞ்சிகைகள் அதற்கான களத்தை ஏற்படுத்திக்கொடுக்க முயற்சிக்கின்றன. இரு தரப்புகளின் சிந்தனைகளையும் இளவேனில் தொடர்ச்சியாகப் பதிவு செய்துகொண்டிருக்கிறது. உரையாடல் வெளிகளை ஏற்படுத்திக்கொடுக்கிறது.

தாம் நினைப்பதே சரி என்று நினைக்காமல், சற்று விலகி நின்று, பிடியைத் தளர்த்தி, விட்டுப் பிடித்து, இணக்கமான ஒரு உறவை பேணுதல் என்பது இரு தரப்பிற்கும் இன்றியமையாத ஒன்று.

இருத்தலும் வாழ்தலும் இனிது.

**அன்புடன்**

**-இளவேனில் ஆசியர் குழு**




# மௌனம் கலைவது எப்போதோ?


சரணியா

2025 பங்குனி 16, இளவேனில் வாசகர் முற்றம் நிகழ்ச்சி எனக்குள் எழுப்பிய கேள்விகள்தான் இந்தப் பதிவு. இதழ் 27ன் வாசகர்களது கருத்துக்களையும், அனுபவங்களையும் அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன்தான் அந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தேன். வழமையாக அனுபவப் பகிர்வினைத் தொடர்ந்து நமது சமுகத்தில் பேச விரும்பும் ஆனால்

பேசப்படாத தலைப்பினைப் பற்றி பேசுவர். அது போலவே இம்முறை, mid life crisis பற்றிப் பேசினர். ஆரம்பித்த போது, இதுக்கு இன்னும் நிறைய காலம் இருக்கு என்று ஆர்வம் இல்லாமல்தான் கேட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், மனநல மருத்துவர் தாரணி அவர்கள் கூறிய அந்த வார்த்தை என்னை இன்று வரை சிந்திக்கச் செய்கிறது.

"எங்களோட அம்மாக்களுடைய மாதவிடாய் நிறைவு (menopause ) காலம் பற்றி எங்களுக்கு தெரிஞ்சே இருக்காது. எங்களோட அதைப் பற்றி கதைச்சிருக்க மாட்டினம்"

எங்கேயோ எப்போதோ எனக்குள்ளே ஒழித்து வைத்த குற்றவுணர்ச்சியைத் திரும்பத் தோண்டி எடுக்க வைத்த வார்த்தை அது. இன்று வரை எனக்குள் இருக்கும் கேள்வி, "ஏன் என்கிட்ட சொல்லல". நான் சிறு பிள்ளைதான். ஆனால் சொல்லியிருந்தால், புரிந்து கொள்ள முடியாத வயதில்லை. இருந்தும் எனக்குச் சொல்லப்படாத இரகசியம். ஒரு பெண் பிள்ளையாக இருந்துமே மறைக்கப்பட்ட இரகசியம்.

இன்றும் எனக்கு மறக்கமுடியாத எனது அம்மாவின் அந்தக் கோப முகம். "ஏன்? நான் என்ன தப்பு செய்தேன்? ஏன் என்னை திட்டுறா? அம்மாவுக்கு இப்ப என்னைப் பிடிக்கலையோ? ஏன் எப்பவும் எரிச்சலா, கோபமா இருக்கிறா? என்னதான் இந்த மனிசிக்கு ஆச்சு?" இப்படி பல கேள்விகள் எனக்குள்ளே. இரண்டு வருடங்கள் செல்ல நான் தெரிந்துகொண்ட பதில் "Menopause".

2025ல் இருக்கிறோம். புதனுக்கே விண்கலம் அனுப்பியாயிற்று. இன்றும் எங்களுடைய குடும்பத்தில் மனநல பாதிப்புப் பற்றி பேசும் அளவிற்கு, சமத்துவம் பேசும் அளவிற்கு, காதலைப் பேசும் அளவிற்கு மாதவிடாய் பற்றிப் பேசுவதில்லையே. இப்ப யோசித்துப் பார்த்தாலும், என்னுடைய அம்மாவின் மாதவிடாய்க் காலமோ, அவர் pad பயன்படுத்தியதோ எனக்கு நினைவே இல்லை. அல்லது எனக்குத் தெரியாது என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். எப்படித் தெரியும்? யார் தெரியப்படுத்தியது? இந்த நிமிடம் எனக்குள்ளே குற்றவுணர்ச்சி மட்டும் தான். நான் தெரிந்துகொண்டிருக்க வேண்டும், அம்மாவிற்கு உதவியாக இருந்திருக்க வேண்டும், சமைக்க வேண்டாம், ஓய்வெடுங்கோ என்று சொல்லியிருக்க வேண்டும்.

ஒரு சாதாரண தமிழ் குடும்பத்தில் மாதவிடாய் என்பது, பெண்கள் மௌனமாகக் கடந்துசெல்லும் ஒரு விடயமாகத் தான் இன்று வரை இருக்கின்றது. மாதவிடாய் - பொதுவில் பேசக்கூடாத விடயம், பெண்கள் அசுத்தமாக அவமானாமாக உணரும் தருணம், ஆண்களுக்கு தேவையில்லாத பெண்கள் விடயம். கோவிலுக்குப் போகதே, தனியாப் படு, சாமியறைக்குள்ளே நுழையாதே, வெள்ளிப் பாத்திரத்தைத் தொடாதே... ஏன் என்ற கேள்விகூட இல்லாமல், நாங்கள் தலைமுறை தலைமுறையாகக் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள், மீண்டும், மீண்டும் மாதவிடாய் என்பது அசுத்தம், புனிதமின்மை என்பதை வலியுறுத்தவா? காலம் காலமாக இதைப் பார்த்தும் கேட்டும் வளரும் எங்களது குழந்தைகளுக்கு நாம் சொல்லித்தருவது இது பேசக்கூடாத பெண்கள் இரகசியம் என்பது தானே.

ஏன் பெற்றோர்கள் மாதவிடாய் பற்றித் தங்களது பிள்ளைகளிடம் பேசத் தயங்குகிறார்கள்? குறிப்பாக ஆண் பிள்ளைகளிடம். மாதவிடாய் பற்றிய அடிப்படை அறிவைக் கூட வழங்காமல்

அறியாமையில் ஏன் எங்களது பிள்ளைகளை வளர்க்க விரும்புகிறோம்?

திடீரென தங்களது சகோதரிகள் வித்தியாசமாக நடத்தப்படுவதைப் பார்க்கும் ஆண் பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு, நாங்கள் சொல்வது என்ன. "இது உனக்குத் தேவையில்லாதது" "இது பெண்பிள்ளைகள் விடயம், ஆண்கள் பேசக்கூடாது" என்பதா? இது அவர்களது மனதில் என்னவாகப் பதியும் என்று எப்பொழுதாவது நாம் யோசித்திருப்போமா? இந்த மௌனமும், இரகசியமும் அவர்களிடம் புறக்கணிப்பை மட்டுமல்ல, அசௌகரியத்தினை, கிண்டலினை, சில நேரங்களில் பெண்கள் மீதான மரியாதையற்ற தன்மையினையும் உருவாக்கவல்லது. மாதவிடாய் பற்றிய சாதாரண அறிவு கூட இல்லாத ஆண் பிள்ளைகள் எப்படி ஒரு அரவணைப்பான மகனாக, நண்பனாக, கணவனாக இருக்க முடியும்.

எவ்வளவுதான் நாங்கள் முன்னேறியிருந்தாலும், ஏன் இன்றும் ஒரு padஐ அலுவலகங்களில் மேசைக்குக் கீழ் மறைத்துத்தான் வாங்குகின்றோம்? Trolleyல எல்லா சாமன்களுக்குள்ளேயும் மறைத்து வைக்கின்றோம்? ஆண் சகோதரர்களின் நடமாட்டம் இருக்கும் இடத்தில் வைத்தால் எத்தனை பேச்சுக்கள் அம்மாவிடம் வாங்குகிறோம். எதை மறைக்க நினைக்கின்றோம்? உலகத்தின் பாதி சனத்தொகை ஒவ்வொரு மாதமும் எதிர்கொள்ளும் ஒரு சாதாரண உயிரியல் சார்ந்த வாழ்க்கை முறையையா?

நாங்கள் padsஐ மறைக்கும் ஒவ்வொரு முறையும், யாரும் பார்க்கிறார்களா என்று பார்த்து பார்த்து அலமாரியிலிருந்து padஐ எடுக்கும் ஒவ்வொரு முறையும், எங்களை அறியாமலே எங்கள் அடுத்த தலைமுறையினருக்கு வலியுறுத்துவது மாதவிடாய் என்பது ஒரு சங்கடத்திற்குரிய, பேசக்கூடாத இரகசியம் என்பதைத்தான்.

எத்தனை அப்பாக்கள் சங்கோஜப்படாமல் தங்கள் பெண் பிள்ளைகளுக்கு pad வாங்குகிறார்கள். அல்லது எத்தனை அப்பாக்கள் பெண்கள் பூப்பெய்தியதும், அவர்களுக்குத் துணையாக, அவர்களது அச்சங்களுக்கும், கேள்விகளுக்கும் உடனிருந்து பதிலளிக்கின்றார்கள். பூப்பெய்தும் வரை பெண் பிள்ளைகள் வாழ்வில் ஒன்றி இருக்கும் அப்பா, பூப்பெய்தியதும் இலகுவில் விலகிவிடுகிறார்களே?

பெண் பிள்ளைகளோ, ஆண் பிள்ளைகளோ இதைப் பற்றிப் பேசுவது அவசியம். பெண் பிள்ளைகளுக்கு தங்களது உடலில் மனநிலையில் ஏற்படும் மாற்றங்களைப் பேச வேண்டும். ஆண் பிள்ளைகளுக்கு மாதாவிடாய் தருணங்களில் ஒரு பெண்ணை எவ்வாறு நடத்த வேண்டும், ஒரு பெண்ணின் ஆடையில் கறையைப் பார்த்தால் என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும். ஆண் பிள்ளைகளுக்கும் கடையில் pad வாங்கக் கற்றுக் கொடுப்போமே. இதைப் பேற்றோர்களை விட யாரால் தெளிவாகப் புரிய வைக்க முடியும்?



# The Cut Between Us



Shravan Sivakumar

For years the barber shop was seen as the pinnacle of men's freedom of expression and a safe space for men to talk about how they feel. Historically used by black men as a community space, the growth of the barbershop community alongside the popularisation of black culture and rap music has extended this safe space to men of all ethnic and cultural backgrounds.

While in Australia barbershops exist and continue to carry on as a vessel of safety and open conversation, the culture and stigma-less safe

spaces has expanded beyond the confines of the barber pole laden buildings.

The need for safe spaces is often even more pronounced. The cultural distance, the balancing act between two identities, and the ever-present pressure of being "othered" in a country where you are meant to belong but don't seem like you are from can weigh heavily. As a young Indian-Australian, I can say the sense of not belonging or struggling to fit into the mainstream is something many of us know all too well. We want to break the stigmas placed on us through "light hearted jokes" while still staying true to who we are. There's an expectation to succeed, to represent your community with your actions but also don't be too cultural as you are meant to be a mirror of your surroundings and the truth is you aren't in "your country",suppress your own vulnerabilities so that the cultural stereotypes are broken. For us, the barbershop was one of the few places where we could just be ourselves, not judged, no mask, just us. For just an hour we get to remove the titles and stigmas placed on us by society unknowingly.

In a society that often doesn't understand your struggles, it's rare to find someone who doesn't expect you to just assimilate or act like you aren't battling the internal struggles you face. The idea of the invisible sickness being just that, invisible, and they would like you to keep it that way, because it is easier to ignore than to try and understand. The onus falls on your hands to assimilate into each society wearing a mask for each fractured part of your personality, never letting two of them overlap, never really being able to allow your full self to come out as a whole complex multi-faceted and multi cultured person, And that's why places like barbershops are even more important in ever connected yet ever isolating world. no longer just a place to get a clean cut, it's a place where men, regardless of background, age or orientation, are all equal, they all fit as one. Now every barber shop isn't like this, it takes a special kind of operator to forge these spaces, chipped away like a sculpture creating a masterpiece from what was once just seen as a stone.

The struggle of splitting who you are as a person between your cultural heritage and your outward persona is something that no immigrant or 2nd generation will ever understand. Even the first generation immigrants, facing struggles of their own, wouldn't have the lived experiences to relate or understand what it is that we face. We are the

first, and most likely the last as the world moves to a more globalist position. The isolation that comes with being a first-generation immigrant is more than just physical distance from your culture and homeland—it's emotional too. The sense of not fully fitting into either the place where you are now or the places you come from creates an internal tug-of-war, but you don't know who's winning, is there even a winner? We've been raised to be strong through the struggles of our parents, but we can never be as strong because we won't face what they faced. The mindset that almost invalidates our internal fight. We are raised to be resilient, but the weight of this "strength" can also feel crushing.

In the hum of clippers and the gentle sound of background chatter, being asked a question that holds the weight of the world "how have you been" while simultaneously not being able to answer because if you move, he'll crease your crisp line up. But in this you can find someone who's willing to listen. No judgment. No pretence. Just a man who gets it, even if he doesn't fully understand what it's like to be you. For that one hour in the chair you are the only thing that matters, context be damned. If you feel bad you feel bad, doesn't matter if your parents have felt worse and overcome it, there are no fractured sides of personality, Only the one. You. and how you feel is being heard. There is no advice or connection back to someone else's experiences,it's like speaking into a void but knowing that what you are saying is being validated.

It's not always easy, and some days are harder than others, but the truth is that we're moving in the right direction. The more we talk, the more we share, the more we heal. These conversations begin with our hair being cut, for some it might beat the local bodega. but now the whole world is waking up to the fact that men don't need to suffer in silence. We have a right to feel, to express, and to lean on one another for support.

And so, while the road ahead may still be long, there is hope. A new chapter is being written, one where strength is found together not in silence, but in connection, vulnerability, and being loud about how we feel. The future looks bright, and it starts with one action, taking—whether that happens under the buzzing hum of a barber's clippers, the coffee run, or where else community appears and a level of safety is created.

# சுந்தரர் தாண்டவம்

சுந்தரமல்லன் தன் வீட்டின் பின் இறக்கத்தின் ஒய்வு இருக்கையில் கால் நீட்டி அமர்ந்திருந்தான். அருகில் இருந்து அனல் வீசிக்கொண்டிருந்த வெப்பமாக்கி மெல்பர்ண் குளிருக்கு இதமாக இருந்தது. உடல் மட்டும் ஓய்ந்திருக்க நடுத்தர வயதின் நாய்மனம் ஓயாமல் எண்ண



அலைகளில் அலைக்கழிந்துகொண்டிருந்தது. வருகிற மார்கழியோடு ஐம்பத்தைந்து வயதாகப்போகும் மல்லனை நாமும் சற்று மரியாதையோடே விளிப்பது நல்லதென்பதால் இனி அவரை சுந்தரமல்லர் என்றே விளிப்போம்.

செம்பாட்டு மண்ணும் நல்லதண்ணி ஊற்றுமுள்ள ஒரு விவசாயக் கிராமத்தில் இரண்டு கடின உழைப்பாளிகள் இயற்றிய இல்லற வேள்வியில் விளைந்தவர் தான் சுந்தரமல்லர். பாறை பிளந்து பயன் விளைவித்ததாலும், மனைவி கொடுக்கும் பதமான உணவின் பலனாலும் மல்லரின் தந்தை ஒரு மாமல்லராகத்தான் இருந்தார். வியர்வையும் செம்மண் புழுதியுமாய் அவர் வீடு திரும்பும்போதும், கோவணத்தோடு துலா மிதிக்கும்போதும் பல கண்கள் அவரை மேய்வதுண்டு. இந்தக் கட்டழகனின் புத்திரனாக நமது நாயகர் அவதரித்தபோது, தான் மல்லனென்றால் மகன் மாமல்லன் என்று பூரித்து, “குஞ்சரமல்லன்” என்று பெயரிட எண்ணினார்.



கேதா

‘எப்பொழுதும் அக்கணத்தை மட்டுமே
நினைப்பராம் ஆண்கள் அது தவிர்த்து
மற்ற எக்கணத்தையும் நினைப்பர் பெண்கள்’

என்ற ஆன்றோர் வாக்குக்கமைய, இந்தப் பெயர் எதிர்காலத்தில் தன் மகனுக்கு இம்சையாகிவிடுமே என்றஞ்சிய தாயார், குஞ்சரம் தவிர்த்தால் நன்றென்று பகர்ந்தார். மனைவி சொல்லை மந்திரமாய் ஏற்று சர்வ இலட்சணமும் பொருந்திய தம் மைந்தனுக்கு சுந்தரமல்லன் என்று பெயர்சூட்டினார்.

இந்தத் தோட்டந்துரவுக்க கிடந்து சீரழியாமல் படிச்சு நல்ல உத்தியோகத்துக்குப் போகவேணும் என்ற திடசங்கற்பத்தோடு படித்தார் சுந்தரர். கல்வித்திறமையால் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று, புலம் பெயர்ந்து, கலியாணம் கட்டி, மக்களைப் பெற்று, ஆளாக்கி இப்போது வானப்பிரஸ்த்தத்தின் வாசலில் நிற்கிறார்.

எண்ண அலைகளில் அலைந்து கொண்டிருந்த மல்லரை "தேத்தண்ணி வேணுமோ" என்ற மனைவி மகிழினியின் குரல் தடுத்தாட்கொண்டது. "ஓம்" சொல்லி முடித்தவுடன் மீண்டும் எண்ண அலைகள். உள்ளே அடி ஆழத்தில் ஏதோ ஒரு குறை.

கற்றோரும் மற்றோரும் மதித்துப் போற்றும் உயர் பதவி, வசிப்பதற்கொன்று, முதல் வளர்ப்பதற்கு மூன்று என்று நான்கு வீட்டுக் கடன்களைக் கட்டவல்ல வருமானம். பட்டம் பெற்றுப் பணியில் சேர்ந்து சொந்தக் காலில் நிற்கும் மகன். அன்பான மனைவி. இதுவரை பெரிய நோய் பிணி இல்லை. பலபேரின் கனவு வாழ்க்கைதான் மல்லரின் வாழ்க்கை. எல்லாம் இருந்தும் மனதில் ஒரு குறை.

"என்னப்பா, இண்டைக்கு ஒரே யோசனையா இருக்கிறயள்? வேலையில ஏதும் பிரச்சினையே?"

தேநீர்க் குவளையை மேசையில் வைத்தபடிக் கேட்டார் மகிழினி. "ஒண்டுமில்லை" என்றபடி, ஒருமிடறு தேநீரை உள்ளே இறக்கினார் மல்லர். ஓடிக்கொண்டிருக்கும் எண்ணங்கள் ஒரு மிடறுத் தேநீருக்குத் தலைவணங்கி சற்றே ஒய்வெடுத்தன. மறுமிடறு இறங்கியதும் மல்லருக்கு மகிழினியோடு மனம்விட்டுப் பேசவேண்டும் போலிருந்தது.

"மகிழ், நாங்கள் படிப்பு, வேலை, பிள்ளையள், வீடு வாசல் எண்டு ஓடித்திரிஞ்சதில, எங்களைப் பற்றி யோசிக்காம விட்டிட்டமோ எண்டு யோசிக்கிறன்" ஒரு நீண்ட உரையாடலைத் தொடங்கும் முதற்படியை எடுத்து வைத்தார்.

"எங்கட வேலை, எங்கட பிள்ளையள், வீடு. இதுக்கு நாங்கள் ஓடித்திரியாமல் வேறயார் திரிவினமாம்? ஏதோ ஊருக்கு உழைச்சுக் களைச்சமாதிரிப் புலம்புறியள்?"

மல்லர் மௌனித்தார். அந்த அதீத அமைதியில் மல்லர் தேநீர் உறிஞ்சும் சத்தம் சற்று அதிகமாகவே கேட்டது.

"அப்பிடி இல்லையப்பா. பெரிய விசயங்களை முடிக்கோணும் எண்டு திரிஞ்சதில எங்கட சின்னச்சின்ன ஆசைகளைக் கவனிக்காமல் விட்டுட்டம்"

"எல்லாரும் எல்லாத்தையும் கவனிக்கேலுமே? எனக்குந்தான் பாட்டுப் பாட விருப்பம். அஞ்சு வயசில நான் தேவாரம் பாடினதைப் பார்த்து என்ர ஒண்ட விட்ட பெரியம்மா அப்பவே சொன்னவா, எனக்குப் பெரிய எதிர்காலம் இருக்கெண்டு. இப்ப உங்களோடையும் பெடியனோடையும் கத்திக் கத்தித் தொண்டைத் தண்ணி வத்தினதுதான் மிச்சம்"

மகிழினியின் சலிப்புச் செறிந்த பதில் மல்லருக்கு ஆடே ஓடிவந்து அடுப்படியில அணைஞ்சதுபோலிருந்தது. கதிரையில் நிமிர்ந்து அமர்ந்து, ஆழமாகத் தன் மனைவியின் கண்களைப் பார்த்து "அதேதான் நானும் சொல்லுறன். அப்பிடி நாங்கள் விட்ட விசயங்களை இனிச் செய்யவேணும். இப்பப் பிள்ளையள் வளந்திட்டுதுகள். நாங்கள் இனி எங்களுக்காக வாழவேணும். எங்களுக்குப் பிடிச்சதுகளைச் செய்யவேணும். அதுதானப்பா we need some "me time".

"சரி நீங்கள் இருந்து உங்கட மீடைமை என்ஜோய் பண்ணுங்கோ. எனக்கு வேலைகிடைக்கு".

ஒரு ஆழமான, ஆத்மார்த்த கலந்துரையாடலை அலட்சியமாகக் கடந்துபோன மனைவிமேல் மல்லருக்கு ஆத்திரத்தைவிட, அவள் அறியாமையை நினைத்துச் சிரிப்புத்தான் வந்தது. அது ஒரு ஞானச் சிரிப்பு. மாயையின் தளை அறுத்து, நிலையான பேரின்பத்தின் வழியறிந்த ஞானிகளுக்கே உரிய சிரிப்பு. இனி என்வழி தனிவழி என்ற உள்ளத்து உறுதியின் சிரிப்பு.

அடுத்தநாள் தனியாக ஒரு திரைப்படத்தில் மூழ்கியிருந்த மகிழினியின் கவனத்தை மாடியிலிருந்து தொடர்ச்சியாகக் கேட்ட இடியோசைகள் கலைத்தன. பதறிப்போய் மாடி அறையைத் திறந்துபார்த்த மகிழினிக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

'தகிட ததிமி தகட ததிமி தந்தானா, இதய ஒலியின் ஜதியில் எனது தில்லானா' என்று பாடல் சத்தமாக ஒலிக்க மல்லர் சுழன்று சுழன்று ஆடிக்கொண்டிருந்தார். அந்த ஊழிப் பெருங்கூத்தின் அதிர்வில் மேசையிலிருந்த சில பல பொருட்கள் விழுந்து சிதறியருந்தன.

"நிப்பாட்டுங்கோ. என்ன விசர்க்கூத்திது. விசர் முத்திப் போச்சே?" என்ற மனைவியின் அதட்டல், மல்லரைக் கலையுலகிலிருந்து மண்ணுலகிற்கு மீட்டுவந்தது.

"உமக்குத் தெரியாது. நீர் சின்னனில பாடினமாதிரி, நான் நல்லா ஆடினனான். பரத நாட்டிய வகுப்பில சேத்துவிடக் கேட்டனான். ஆம்பிளைப் பிள்ளைக்கு என்ன ஆட்டம் எண்டு அப்பா விடவேயில்லை. இனியெண்டாலும் என்ற விருப்பங்களை நான் நிறைவேற்றவேணும்."

"அதுக்கு இப்பிடிக் கூத்தாடி வீட்டை-யேன் உடைக்கிறயள்?"

"சரி. நான் இனி வேற இடத்தில ஆடுறன்"

இதென்ன சீரழிவப்பா. இந்தாள் நல்லாத்தேனே இருந்தது. எதுக்கும் கொஞ்சம் விட்டுப்பிடிப்பம் என்று சிந்தித்த மகிழினி, " உங்கட வீடுதானே, அதை நீங்களே ஆடி அடிச்சுடையுங்கோ" என்ற சலிப்புரையுடன் அவ்விடம் விட்டகன்றார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. அதிகாலை ஐந்து மணி. மெல்பேர்ண் நகரம் மைனஸ் இரண்டு பாகை செல்சியஸ் குளிரில் இறுக்கமான பனிப் புகாரில் நடுங்கிக் கொண்டிருந்தது. மல்லரின் வீடு மட்டுமல்ல அந்த வீதியிலேயே யாரும் விழித்திருக்கவில்லை.

மல்லர் யாதும் சுவடுபடாமல் எழுந்து கராஜுக்குள் நுழைந்தார். முக்காலியில் கமராவைப் பொருத்திச் சரிபார்த்தார். எலும்புகளை நடுங்கவைக்கும் குளிர் மல்லருக்கு நட்டுவாங்க ஆசானாகத் தெரிய, தூரத்தில் கேட்ட கோக்கபுராவின் சிரிப்பும், கொக்கட்டுவின் கனைப்பும் இசையாக, தொலைபேசியில் பாடலை ஒலிக்கவிட்டார்.

ஆடல் கலையே தேவன் தந்தது. தேவனின் ஆடலில்தான் ஜீவன் வந்தது.

இடையில் வேட்டியை பஞ்சகச்சமாகக் கட்டி, வெறும் மேலோடு ஆடியபோது கயிலைமலையில் களிநடம்புரியும் ஆடலரசனே தன்னுள் இறங்கி ஆடுகிறான் என்று உணர்ந்தார் மல்லர். மைனஸ் இரண்டு பாகைக் குளிரிலும் வேர்த்துக் கொட்டியது. ஆடி அடங்கியதும், எந்தத் தடயமும் இல்லாமல் கராஜை பழையபடி மாத்தியபின் காணொளியைப் போட்டுப் பார்த்தார். பெருமை பிடிபடவில்லை. கலையென்பது ஒரு கொடை. எல்லாருக்கும் வாய்ப்பதில்லை. எனக்கு எக்கச்சமாக வாய்த்திருக்கிறது என்று உள்ளம் நெகிழ்ந்தார்.

இதை யாருக்காவது சொல்லோணுமே. யாரொடு பகிர்வேன், யார்க் கெடுத்துரைப்பேன் என்று சிலகணங்கள் சிந்தித்து, உயிர்நண்பன் இந்திரபாலனுக்கு வாட்ஸப்பில் தட்டிவிட்டார். உடனடியாக "சீன்" என்று இரண்டு சரிகள் வந்தது. அவன் பதிலுக்காக காத்திருக்கும்போதுதான் வெறும்மேல் குளிரத்தொடங்கியதை உணர்ந்தார். குளிரும் வியர்வையும் நீங்க ஒரு வெந்நீர்க் குளியல்போட்டு, சூடான கோப்பியோடு வந்து தொலைபேசியை எடுக்கவும் இந்திரனின் அழைப்பு வரவும் சரியாக இருந்தது.

"மச்சான். எப்பிடி மச்சான். இப்பிடி

ஆடுறாய். எங்கயடா இருந்தனி இவளவு நாளா? இதையெல்லாம் நீ டிக்டோக், இன்ஸ்ட்டா, பேஸ்புக் எண்டு போடோணுமடா. ஒரு நல்ல கலைஞன் குடத்துக்குள்ள விளக்காய் இருக்கக் கூடாது கண்டியோ"

மல்லருக்கு இருந்த நேர்மறை எண்ண அதிர்வுகளுடன் மகிழினி போன்றோரின் எதிர்மறை அதிர்வுகள் பொருந்தவில்லை. இந்திரனின் இதமான வார்த்தைகள் ஒரே அதிர்வெண்ணில் இருந்ததால் உடனடியாகப் பரிவடைந்து "உண்மைதா-னடா, போடத்தான் வேணும்" என்று உடன்பட்டார். உடனேயே செயற்பட்டார்.

அடுத்த அரைமணி நேரத்தில் வாழ்த்துகளும், அருமைகளும், இதயக் குறிப்புகளும் மல்லரின் முகநூலையும் இன்ஸ்டாவையும் இன்னபிற தளங்களையும் நிறைக்க, அவரின் காணொளி பல வாட்ஸப் குழுமங்களிலும் பகிரப்பட்டது.

உருகிப்போனார் மல்லர். "When you want something, the whole universe conspires in order for you to achieve it" என்ற மகாவாக்கியத்தின் அர்த்தத்தின் தித்திப்பை நினைந்து திளைத்தார். ஒரு கலைஞனாகத் தொடர்ந்து தான் களிநடனம் புரிந்து காணொளிகளைப் பகிரவேண்டும் என்று திடசங்கற்பம் கொண்டார்.

நாளொரு காணொளி, பொழுதொரு நாட்டியம் என்று வளர்ந்தது கலை. வருகின்ற ஏராளம் வாழ்த்துகளில், ஒருநாள் உனைக் காணாவிடின் உறங்காதெந்தன் இருமான்விழி என்று வந்திருந்த வாழ்த்து கவனத்தை ஈர்த்தது. அனுப்பியது அம்பிகைவாணி. அம்பிக்கு என்னில எப்பவும் ஒரு தனி அன்புதான் என்று தன்னை நோக்கி மெல்லச் சிரித்தார் மல்லர். அம்பியின் முகநூல் கவிதைகளால் நிரம்பியிருந்தது. இரண்டுமூன்று அருமையையும் ஆங்காங்கே இதயக் குறிகளையும் இட்டு மீண்டார். மறுகணமே நாண இரசம் மேலோங்கும் ஒரு பாடலை அடுத்தமுறை அரங்கேற்றவேண்டும் என்றும் நினைத்துக்கொண்டார். பாடகர்களைப் போல, அறிமுகமில்லாதவர்களுடன் சேர்ந்து ஆடும் தளங்கள் ஏதாவது இருக்கிறதா என்று தேடவேண்டும் என்றும் நினைத்துக் கொண்டார். ஆர்மோனியத்தில் பட்டதும் பாடல்களைக் கொட்டும் இளையராஜாவின் விரல்கள்போல தன் மனதின் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் பாதங்களை நினைத்துப் பரவசமுற்றார். இப்போது மீண்டும் நண்பன் இந்திரனிடமிருந்து அழைப்பு.

"மச்சான். இப்ப எங்க பாத்தாலும் உன்ற ஆட்டத்தைப் பற்றித்தான் கதை. உன்னை மேடையேத்தி அழகுபாக்கோணும் எண்டு எங்கள் எல்லோருக்கும் ஆசையாக் கிடக்கு. மாட்டன் எண்டு சொல்லிப் போடாத. எல்லா அலுவலும் நாங்கள் பாக்கிறம்" படபடவென இந்திரன் சொல்ல, மல்லருக்கு என்ன சொல்லிறதெண்டே தெரியேல்ல. கம்பருக்கு ஒரு சடையப்பராய் எனக்கு இவன் வாய்ச்சிருக்கிறான்.

"டேய், நன்றியடா. ஆனால் நான் முறையா நாட்டியம் படிக்கேல்ல. குருவெண்டு ஒருத்தரும் இல்லை. அதோட இந்த வயதில..சனம் சிரிக்குமடா. சும்மா உசுப்பேத்தாத"

"சனத்தின்ற கதையை விடு. நீ ஏகலைவனடா, உனக்கு நீதான் குரு. பிறவிக் கலைஞனுக்கு குரு தேவையில்லை. அதோட எந்தவயதிலையும் சாதிக்கலாம் எண்டதுக்கு நீ ஒரு எடுத்துக்காட்டு. நீ கட்டாயம் அரங்கேறவேணும்"

இந்திரனின் மந்திரச் சொற்களில் மயங்கிப் போனார் மல்லர். மனுசி பிள்ளையளிட்ட ஒருவார்த்தை கேட்கக்கூட நினைக்காமல், "சரி உன்னை நம்பி

இறங்குறன். எல்லாம் நல்லா நடக்கோணும்" என்று அரங்கேற இணங்கினார் மல்லர்.

இரவுமுழுவதும் தூக்கமின்றித் தவித்தார் எங்கள் ஆடலரசர். பூசலாரின் கோயில் போல மெல்ல மெல்ல அவர் மனதில் அரங்கேற்ற ஆயத்தங்கள் தொடங்கின.

சில இரசிகர்கள் மேலைத்தேய, பொலிவூட் வகை நடனங்களை எதிர்பார்த்தாலும், தன் மனதிற்கு நெருக்கமான பரதநாட்டியம் சார்ந்த நடனங்களையே அரங்கேற்றவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் மல்லர். உரைகள் எதுவும் தேவையில்லை. ஒரே நேரத்தில் அரங்கிலும், இணையவழியிலும் கண்டுகளிக்கும் வகையில் இருக்கவேண்டும். ஒரு மூன்று கமரா போட்டு, லைவ் மிக்சிங் செய்தால் சிறப்பு. மங்கோ ட்ரீயிடம் சைவச் சாப்பாடு எடுக்கோணும். சில தெலுங்குக் கீர்த்தனைகள், தமிழ் உருப்படிகள், பாரதியார் பாட்டொண்டு, ஒரு தில்லானா, கொஞ்சம் சினிமாப் பாட்டுகள். லோக்கல் ஆக்களைப் போட்டால் குவாலிட்டி குறைஞ்சிடும். வெளியாக்களை இறக்கினால் செலவு. அதோட நேரமும் இல்லை. இந்தியாவில இருந்து ரெக்கோட்பண்ணி எடுத்து இஞ்ச போடுவம். பொன்னாடைச் செலவும் மிச்சம். உன்னிகிருஷ்ணனையும், மகளையும் கேக்கலாம். கடுமையாச் செலவழிக்கவும் கூடாது. எனக்கும் ஒரு நாலஞ்சு காஸ்ட்யூம் எடுக்கோணும். மகிழுக்கும் பிள்ளையளுக்கும் உடுப்பு... எக்கச்சக்கமா வேலைகிடைக்கு.

மல்லர் மனம் நில்லாமல் ஓடியது.

சிலவாரங்களில் அரங்கேற்ற நாளும் வந்துவிட்டது. டான்டினோங் தமிழர் கலாசார மண்டபத்தில் இரசிகர்கள் குழுமியிருக்கிறார்கள். மெல்பேர்னின் புகழ்பூத்த அறிவிப்பாளர் சத்தியா நிரஞ்சனின் சிம்மக் குரல் "உடலால் இளையவர்கள் அரங்கேறிப் பார்த்ததுண்டு. உள்ளத்தால் இளையவரின் அரங்கேற்றம் காண வந்துள்ள கலை இரசிகப் பெரு மக்களே.." என்று விழாவைத் தொடங்கிவைத்தது.

வாசலில் நின்று வரவேற்றுக் கொண்டிருந்த மகிழினிக்கு எப்பிடி இப்பிடிச் சிக்கினாங்கள் என்ற குழப்பமே மேலோங்கி இருந்தது. "ஏதோ இந்தாள் விளையாட்டாத் தொடங்கி, இங்க கொண்டந்து விட்டிருக்குதே. குழப்பம் இப்ப ஆத்திரமாய் மாறியது. எல்லாம் இந்த இந்திரன் விசரன்ற வேலை. பெடியன்ற கலியாணத்துக்குச் சேத்து வச்ச காசை இந்தாள் கூத்தாடி அழிக்குமெண்டு நான் கனவிலையும் நினைச்சனானே" தனக்குள் பேசிக்கொண்டிருந்த மகிழினியை, "அம்மா" என்ற மகனின் அழைப்புச் சற்று நிறுத்தியது.

"How the hell we ended up here amma. It's ridiculous and disgusting. All my friends are laughing behind my back. I know for a fact, even though they don't say that to my face. I feel so embarrassed. I mean, this is serious cringe stuff. I feel bad for you too. I know appa is stubborn, but this is a disaster"

இடைவிடாமல் பொழிந்த மகனை மகிழினி இடைமறிக்கவில்லை. அவனெண்டாலும் மனதில் பட்டதை சொல்லட்டும் என்று நினைத்திருக்கலாம்.

"இதோ நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் பொன்விழாக்கண்ட புத்துயிர் இளைஞன், தானே தனக்குக் குருவாயிருந்து தனை வளர்த்த தன்னிகரிலாப் பெரும் கலைஞன். இணையவழி வந்து நம் இதயம் கொண்டவன். இதோ உங்களை மகிழ்விக்க வருகிறார். "அறிவிப்பாளர் முழங்க, இசை முழங்க, விளக்குகள் ஒளிர அத்தனை கண்களும் மேடையை மொய்க்கப்

பாடல் ஒலிக்கிறது.

"வாக்ரதாயாவத சம்பிரக்தோ..." சலங்கையொலியின் பாடல் ஒலித்தது.

சிவப்புப் பட்டுப் பஞ்சகச்சத்தோடு, வெறும்மேலில் சரிகைச் சால்வை மட்டுமே அணிந்து ஒற்றைக் காலைத் தூக்கியபடி சுந்தரமல்லர் நடுநாயகமாகத் தோன்றினார். அடுத்த அடியில் அவைக்கு வணக்கம் சொல்லி மீண்டும் திருவடி தூக்கினார். முழங்காலிலிருந்து இழுபட்டுப் போகும்பொது மகிழினிக்கு ஏதோ அசம்பாவிதம் நடந்துவிடுமோ என்ற பதட்டம் தொற்றிக்கொண்டது. அடுத்ததாக இரண்டு கைகளையும் பம்பரமாய்ச் சுற்றிச் சுழன்றாடினார் மல்லர். அடுத்தது மிகச் சிக்கலான அசைவு. துள்ளி வானில் எழுந்து, தரையில் பாதத்தை ஊன்றி, சடுதியாக முழங்காலில் இருக்கவேண்டும். முழங்காலை இழுத்தபடி நகரவேண்டும். பல அசம்பாவிதங்கள் நிகழலாம் என்ற அச்சத்தால் ஒத்திகைகளில் அதைத் தவிர்பதாகாகவே தீர்மானிக்கப் பட்டிருந்தது. தாளம் தப்பிவிடலாம் என்று சிலர் எச்சரித்தார்கள். அது எப்போதும் சேரவேயில்லை என்பது வேறுகதை. இருந்தாலும் இது அரங்கேற்றம். இதிலெப்படி உச்சக்கட்ட கலை வெளிப்பாட்டைத் தவறவிடலாம் என்று சிந்தித்த மல்லர், முழுவேகத்தோடு துள்ளி எழுந்து, இரண்டு காலையும் மடக்கிக் காற்றில் பறந்து, வலதுகாலை ஊன்றினார். கணப்பொழுதில் கால் வழுக்க, பஞ்சகச்சம் கிழிய, இரண்டு காலும் இருவேறு திசைகளில் போக மல்லாந்து விழுந்தார் மல்லர்.

"என்ற சிவபெருமானே" என்ற மல்லரின் ஓலம் அரங்கைப் பிளந்தது. ஒருகணம் இதுவும் நடனத்தின் அம்சமோ என்று நினைத்த அவைக்கு, "ஐயோ சுந்தர் அப்பவும் சொன்னனான்.." என்று கத்தியபடி மேடைக்கு ஓடிய மகிழினியின் குரல் நிலைமையின் தீவிரத்தை உணர்த்தியது.

தறித்து விழுத்திய சோத்திப் பனைபோல் விழுந்துகிடந்தார் மல்லர்.

நாதவினோதங்கள் நடன சந்தோசங்கள் பரம சுகங்கள் தருமே

அபிநயம் காண்பதும் அதில்மனம் தோய்வதும் வீடுபேறு தருமே

உன்னிகிருஷ்ணனும் மக்களும் பாடிய கவர் பாடல் ஓயாமல் ஒலித்துக் கொண்டிருந்தது.

"சுந்தர், சுந்தர்.." மகிழினியின் பதட்டமான குரல் கொஞ்சம் கொஞ்சமாய் அழுகையாய் மாறத்தொடங்கியது. "அப்பா. எழும்புங்கோ அப்பா" விம்மினான் மகன்.

யாரோ அவசரசேவைகளுக்கு அழைப்பெடுத்தார்கள். முன்வரிசையில் சிறப்புவிருந்தினர்களில் ஒருவராக அமர்ந்திருந்த மருத்துவர் பாலா ஓடி வந்தார்.

மூச்சும் இதயத்துடிப்பும் இருக்கிறதா என்று சோதிக்க மல்லரின் கையைப் பிடித்தார் பாலா.

சலங்கைகள் ஒலிக்க மல்லரின் கால்கள் மெல்ல அசையத் தொடங்கின.

நர்த்தனமே சிவகவசம் நடராஜ பாதம் நவரசம்.

பாடல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

# மொய் விருந்து



பாலா

'இங்க இந்த இலைக்கு சாதம் வைங்க , உங்களுக்கு குழம்பா , இல்லை ரசமா? நல்லா கேட்டு வாங்கி சாப்புடுங்க. அட நீங்களா, எப்படி இருக்குறீங்க, வீட்டுல வரலையா? இன்னும் கொஞ்சம் பீன்ஸ் வைக்கட்டுமா? சின்ன பசங்களுக்கு கேட்டு வைங்க.' என்று விருந்து பந்தி ஒரே பரபரப்புடனும், பயங்கர உபசரிப்புடன் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஏசி ஹால் , 250 பேர் அமரக்கூடிய பந்தி அமைப்பு, முக்கியமாக சைவத்திற்கு தனி, அசைவத்திற்குத் தனி என இரண்டு ஹால். அதில் எனக்கு இடம் கிடைத்தது மூன்றாவது பந்தியில். வெளியில் நின்று கொண்டிருந்தது இன்னும் மூன்று பந்திக்குரிய கூட்டம். ஆம், கிட்டத்தட்ட ஆயிரத்து ஐநூறு பேருக்கு சைவம், அசைவம் என்று தனித்தனியாக விருந்து சிறப்பாகப் போய்க்கொண்டிருந்தது.

அது ஒரு பெரிய புள்ளி வீட்டுக் கல்யாண விருந்தோ, இல்லை வார வாரம் நடக்கும் கச்சேரி நிகழ்ச்சியோ இல்லை. அப்படியென்றால்,வேறு என்ன விருந்து இது என்ற உங்க கேள்விக்கு,, புதுக்கோட்டை அருகில் உள்ள சிறிய கிராமத்தில் இருக்கும் மன்னார் வீட்டு விருந்தை பற்றி தெரிந்துகொண்டால் பதில் புரியும்.

இன்னும் ரெண்டு மாசம்தான் இருக்கு, அதுக்குள்ள எப்படியாவது பீஸ் கட்டணும்பா என்ற மகளின் இரண்டு வரி திருக்குறள் செய்தியை தபால்காரர் வாசித்து விட்டுப் போனது காதுகளில் ரீங்காரமிட, வேறு வழியில்லாமல் மனைவி சொன்ன விருந்துக்கு சரி என்று சம்மதித்தான் அரிசி மண்டி மன்னார். மகளை கல்லூரியில் ஒரு வருடத்திற்கு முன் சேர்த்தபொழுது , அந்த வருடத்து போகத்தை போல் இன்னும் ஒரு போகத்தை பார்த்தால் அவளது நான்கு வருட படிப்பிற்கு சம்பாதித்துவிடலாம் என்று நம்பிக்கையோடு இருந்தான். அவனைவிட, ஊரில் உள்ள எல்லோருக்கும் பெரும் சந்தோஷம். அவர்கள் வீட்டின் முதல் பட்டதாரி என்று எல்லோரும் பெருமைப்பட்டார்கள். ஆனால் ஒரே வருடத்தில் மன்னாரின் நிலைமை இந்த அளவிற்கு சரியும் என்று யாரும் நினைக்கவில்லை.

ஒரு காலத்தில் ஊரில் உள்ள எல்லா வியாபாரிகளுக்கும் குடுத்தது போக மிச்சம் இருக்கும் போகத்தை குறைந்த விலையில் கடைநிலை தொழிலாளிகளுக்கு வாரி குடுத்த மன்னார், இன்று ஊரைக் கூட்டி விருந்து வைக்கும் நிலைக்குக் காரணம் பொய்த்துப்போன மழை மட்டும் அல்ல, அடுத்தவர்கள் மனதை மட்டும் பார்த்து அவர்களது திறமையைச் சோதிக்காமல்



கொடுத்த கடன் எல்லாம் கானல் நீராய்ப் போனதும்தான்.

ஊரைக் கூப்பிட்டு விருந்து வைப்பது சகஜம்தான் என்றாலும், இந்த இரண்டு வருடத்தில் அக்கம் பக்கம் கிராமத்தில் யாரும் விருந்து வைக்கவில்லை. அது மன்னாருக்கு கொஞ்சம் தெம்பை குடுத்தது. மேலும், இன்னும் இரண்டு மாதத்திற்கு விசேஷ நாட்கள் எதுவும் இல்லை என்பதும் கூடுதல் நிம்மதியை குடுத்தது.

பெரும்பாலும், புதுத் தொழில் தொடங்குவதற்கு, இல்லையென்றால், நல்ல விசேஷம் கொண்டாட "மொய் விருந்துக்கு" கூப்பிடுவார்கள். ஆனால், தன் வீட்டில் முதல் பட்டதாரியை உருவாக்க, மன்னாரு விருந்துக்கு யோசனை கேட்டவுடன், அனைத்து வியாபாரிகளும் போட்டி போட்டுக் கொண்டு, தங்களால் ஆனமட்டும் விருந்துக்கு தங்கள் கடையில் இருந்து கணக்கு பார்க்காமல் பொருட்களை தர முன்வந்தது, எத்தனை பேருக்கு இந்த படிப்பின் படிகள் கிடைக்காமல், வாழ்க்கையில் மேலே ஏற முடியாமல் போன ஏக்கத்தின் வலி தெரிந்தது.

விருந்துக்கு தேவையான காய்கறி முதல் ஆட்டுக் கறிவரை எல்லாவற்றிக்கும் சொல்லி வைத்தாயிற்று. அடுத்து விருந்துக்குக் கூப்பிடுவதுதான் பாக்கி. அதில்தான் மன்னாருக்கு இரு தலைக் கொள்ளி எறும்பைப்போல் பிரச்சனை . அவனது பழக்கத்திற்கு கண்டிப்பாக எல்லோரும் விருந்துக்கு வருவார்கள். ஆனால் அவ்வளவு பெரிய கூட்டத்திற்கு இலை போட்டு பரிமாற அவனது வீட்டில் இடமில்லை. வேறு வழியின்றி , நெல்லை அடித்துக் காயவைக்கும் மில்லில் பெரிய அளவில் பந்தல் போட்டு விருந்தை சிறப்பாக நடத்தினான்.

அவனது கிராமத்தில் இருந்து மட்டுமில்லாமல், பக்கத்துக் கிராமத்தில் இருந்தும் கூட்டம் கூட்டமாக வந்து பொறுமையாக காத்திருந்து விருந்தில் கலந்துகொண்டார்கள். அத்தனை பேருக்கும் சளைக்காமல் விடிய விடிய சமைத்துப் பரிமாறியது எல்லாம் அக்கம்பக்கத்துக் கூட்டாளிகள்தான்.

பந்திக்கு முந்து படைக்குப் பிந்து என்ற சொல்லுக்கு எதிராக, பந்திக்கு போகும்முன், மொய்யுக்கு முண்டியடித்த கூட்டத்தை சமாளிக்கத்தான் முடியவில்லை. ஏனன்றால், பன்னிரெண்டுமணிக்கு மேல் மொய் எழுதினால் அது "பின் வரவு" கணக்கில் போய்விடும் , அப்புறம் அது பெரும் மானப் பிரிச்சனையாகிவிடும் என்பதால்.

மன்னாருக்கு மொய் கணக்கு எழுதி கொடுத்த, அந்த கிராமத்து வங்கி மேலாளர், இதுவரைக்கும் அவரது வங்கியில் கூடப் பார்த்திராத அளவிற்கு மொய் வரவைப் பார்த்து மூச்சடைத்துப் போனார். ஆனால் வந்த மொய்யில், ஒரு தொகையை அப்படியே அவரது

வங்கியில் சேமிப்பு கணக்கில் மன்னாரு போடச் சொன்னது அவருக்கு விசித்திரமாக இருந்தது. இந்த மொய் விருந்தை ஏற்பாடு செய்தது மன்னாரின் மகளின் படிப்பிற்கு. ஆனால் அதில் பாதியை எதற்கு சேமிப்பு கணக்கில் போட வேண்டும் என்று அவனிடமே கேட்டார். ஐயா, நாங்கள் எப்பொழுது மொய் விருந்தில் மொய் வசூலித்தாலும், அதை செய்தவர்களுக்கு திருப்பி இரண்டு மடங்காகச் செய்வோம், அதற்கு இப்படி கொஞ்சம் சேர்த்து வைத்தால்தான் முடியும். ஏனென்றால், இனிமேல் இந்த பொய்த்துப்போன வானத்தை மட்டும் நம்பி என்னால் இருக்க முடியாது என்று வருத்தத்துடன் கூறினான்.

வந்திருந்து வாய்மணக்க விருந்து சாப்பிட்ட அனைவருக்கும் வயிறு நிறைந்ததைவிட, ஒரு பட்டதாரி உருவாகத் தங்கள் கையை நனைத்ததை பெரிதாக நினைத்துச் சென்றனர்.

அன்று ஒரு கிராமத்துப் பட்டதாரியை தன் வீட்டுப் பட்டதாரியாக நினைத்து அவளுக்காக மொய் விருந்தைக் கொண்டாடிய மக்களைப்போல், பல தரப்பட்ட ஏழைக் குடும்பத்தில், முதற்தலைமுறைப் பட்டதாரிகள் உருவாக, ஆஸ்திரேலிய தமிழர்கள் அமைப்பு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மெல்போர்ன் வாழ் நல்லுள்ளங்களைக் கூப்பிட்டு வாழையிலை போட்டு springvale town ஹாலில் நடத்திய மொய் விருந்துதான் அந்த பெரும் கூட்டம் கூடிய விருந்து.

இன்றைய காலத்தில், கல்யாண வீடாகயிருந்தாலும் சரி, சரவணபவன் மீல்ஸ் கூடமாக இருந்ததாலும் சரி, இலையில் முதலில் ஊற்றிய சாம்பார் காலியாகும் முன்னே அவர்களுக்கு பின்னாடி போய் இடம் பிடிக்க நிற்கும் பழக்கத்துக்கு நடுவில், குழந்தைகள், முதல் வயதான பெற்றோர்கள் வரை பொறுமையாக அவர்களது மணிக்கட்டில் அணிந்திருந்த அடையாள அட்டையின் வண்ணத்தை அழைக்கும்வரை மேடையில் நடைபெற்று கொண்டிருந்த கலை நிகழ்ச்சிகளைப் பார்த்தபடி காத்திருந்தது பார்க்க ஆச்சரியந்தான்.

எந்த ஒரு விருந்தின் சிறப்பும், மூன்று உப்பின் அளவிலே தெரியவரும். வரவேற்பு, உபசரிப்பு, இலையில் வைக்கும் உணவில் இருக்கும் உப்பு. அந்த வகையில், இந்த மொய் விருந்தில், அவை மூன்றும் சிறப்பாக இருந்தது. அதற்கு முக்கிய காரணம், அந்த மூன்று உப்பை பரிமாறிய தன்னார்வலர்களே.

பல தமிழ் அமைப்புகளில் இருந்தும், மிக முக்கியமாக மாணவர் சங்கங்களில் இருந்தும் கிட்டத்தட்ட, நாற்பதிற்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பங்கேற்று தங்கள் வீட்டு நிகழ்ச்சியாகப் பாவித்து மிகச் சிறப்பாகச் செயல்பட்டனர்.

இன்முக வரவேற்பில் இருந்து, உணவு வரிசையில் நிற்பவர்களில் சைவத்திற்கு ஒரு இடம் உள்ளது, அசைவத்துக்கு இரண்டு இடம் உள்ளது என்று ஒவ்வொரு முறையும் வரிசை முழுவதும் முன்னும் பின்னும் சென்று ஒவ்வொருவரிடமும் கேட்டு, எந்தப் பந்தியிலும் வெறும் இலை விழாமல் பார்த்ததும், மிக முக்கியமாக பந்தி பராமரிப்பில் கேட்டுக் கேட்டுப் பரிமாறியதும் மொய் விருந்தை ஒரு குடும்பத்து கல்யாண விருந்தாகவே மாற்றி விட்டது.

அந்த மூன்றாவது உப்பின் சிறப்பிற்கு பின்னால், பல சமையல் கலைஞர்கள், தன்னார்வலர்கள் இரண்டு நாட்கள் முழுவதும், காய்கறியில் இருந்து, ஆட்டுக் கறிவரைக்கும் வெட்டுவது, அனைத்து வகை மசாலாக்களையும் தாங்களே தயாரித்து , அவைகளை தன்னார்வலர் ஒருவரின் தொழிலகத்தில் உள்ள குளிரூட்டியில் இரவில் வைத்து, காலையில் அரங்கத்தின் சமையலறைக்கு

எடுத்துவந்து சுடச்சுடச் சமைத்து கொடுத்ததே காரணம்.

அந்த சுவைக்குச் சுவை சேர்த்ததற்கு அரிசி, காய்கறி, முட்டை, பலசரக்கு என்று அனைத்தும் பாதி விலையிலோ, இலவசமாகவோ தந்துதவிய தொழிலதிபர்களும் முக்கிய காரணம்.

மன்னாரும் அவனது கூட்டாளிகளும் ஒரு பட்டதாரிக்கு அளித்த மொய் விருந்தினைப்போல், மெல்போர்னில் ஆஸ்திரேலிய தமிழர்கள் அவர்களது கூட்டாளி சங்கங்களுடன் சேர்ந்து இரண்டு வருடத்துக்கு ஒருமுறை இந்த மொய் விருந்தை நடத்தி வருகிறார்கள். நற்சுவை உணவுக்காக மட்டுமில்லாமல் விருந்தின் மூல காரணத்திற்காக மெல்போர்ன் நல்லுள்ளங்கள் அளித்த மொய் வரவில், கிட்டத்தட்ட நூறு ஏழ்மை நிலையில் இருக்கும் குடும்பத்தின் முதல் பட்டதாரிக்கு இரண்டு வருட பட்டப் படிப்புச் செலவிற்க்குப் பயன்படுகிறது. அதுமட்டுமில்லாமல், பல கிராமங்களில் ஏரிகளை தூர் வாரி, அவர்களின் தண்ணீர் தாகத்தையும் தணிக்கப் பயன்படப்போவது மிக சிறப்பான செயல்.


மெய் வருத்தி அளித்த
மொய் விருந்தில்
கை நனைத்து மகிழ்ந்த
நல் உள்ளங்கள்
மனம் மகிழ்ந்து தந்த
மொய் கொடையில்
கல்விக்கு ஒளி ஏற்றி குடும்பங்களை
உயர்த்த தொண்டாற்றிய
தன்னார்வலர்கள் வாழ்க!...

# மரத்தின் வலி

தச்சனின் மகளுக்குத் திருமணம், வசதி படைத்தவன் அல்ல தச்சன். மகளின் மீது கொண்ட பாசத்தால் உலக பணக்காரர்களை விட வசதி படைத்தவன். அவளின் திருமணத்தை நினைத்தவுடன், அவளுக்குப் பரிசாக ஏதேனும் சிறப்பானதை உருவாக்க வேண்டும் என்ற ஆசை, அவரின் நெஞ்சை நிரப்பியது. கட்டில் செய்ய வேண்டி, மரத்தை தேர்ந்தெடுக்க காட்டுக்குள் நுழைந்தான். அது பெரும் அடர்த்தியான காடு இல்லை என்றாலும், பலதரப்பட்ட மரங்கள் நிறைந்து வனப்புடன் காணப்பட்டது. மரங்கள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்திருந்தன.

அதில் சில மரங்கள் சாமுத்ரிகா லட்சணங்களை கொண்டது போல வளைவு நெலிவுடன் இருந்தன, அழகன்,அழகி போட்டிக்கு போகும் போல் சில ஆஜானுபாகுவாய் நிமிர்ந்து உயர்ந்து முரட்டுத்தனமாக நின்றன, நிதம் 100 தண்டால் எடுப்பவை போலும், இன்னும் சில, இங்கும் அங்கும் சுருண்டு, ஒரே நேர்த்தியில்லாமல் பரவி வளர்ந்தன, சிலர் இவ்வாறு இருப்பதுண்டு, ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்று, ஆனாலும், அவர்கள் வாழ்வில் மிகவும் சந்தோஷமாக தான் இருப்பர்.

சில அதன் கிளைகளை படரவிட்டு அருகில் இருக்கும் தன் காதல் மரத்தை சதா



மது



தழுவிக் கொண்டு இருந்தன, மற்றும் சில, தொன்மைக் கால சிற்பங்கள் போல அசையாமல், அமைதியுடன் நின்றன. இன்னும் சில ஒற்றைத் தூணைப் போல ஒரே திசையில் நேராகத் தங்களைக் கொண்டு சென்றன, நேர்மையான, ஒழுக்கசீலன் போலும்.

இன்று தச்சனின் கோடாரியில் சிக்கப் போகிறவர் யார் என்று தெரியாமல், தங்களுக்குள் பெருமை பேசிக் கொண்டிருந்தன அந்த மரங்கள். அழகி மரம் தன் பெருமை பாட ஆரம்பித்தது. தச்சனின் மகள் என்னைப்போல் அழகு மிகுந்தவளாக இருக்கக்கூடும், அதனால் அவன் என்னைத்தான் தேர்ந்தெடுப்பான் என்றது. ‘அதெப்புடி, என்னைப்போல் பலசாலி தான் கட்டிலுக்கு உகந்தவன், என்றது ஆணழகன் மரம். கோணல் மரம் உடனே, தன் பக்க நியாயத்தை வைத்தது. நான் ஒரு மரம் பலர்க்கு உபயோகப்படுவேன், நேர்த்தியற்றவை தான் பல சாமான்கள் செய்ய பயன்படும் என்றது. அம்பிகாபதி, அமராவதி மரமோ, காதல் பெருக்கெடுக்கும் கட்டிலுக்கு சரியான மரம் நானே என்று எண்ணினாலும், எங்கே தான் தன் காதல் ஜோடியிடம் இருந்து பிரிக்கப்பட்டு விடுவோமோ என்ற கவலை அதன் பேச்சில் தெரிந்தது. சாந்தசொரூபிக்கு, தன்னைத் தேர்ந்தெடுத்தால், சண்டை போட்டு மனஸ்தாபத்துடன் கட்டிலுக்கு வரும் தம்பதியை அமைதிபடுத்தும் தன்மை என்னிடம் தான் உண்டு என்று எண்ணி, அமைதி காத்து நின்றது. எப்போதும் உண்மை செப்பும், உயர்ந்தாலும் வணக்கத்திற்குரிய என்னைப் போன்ற ஒழுக்கசீலன் தான் குடும்ப உறவுக்கு ஏற்புடையவன், என்று மார்தட்டிக் கொண்டது அடுத்த மரம். சாகப்போகும் தருணத்தில் யார் பெரிது என்ற கூச்சலும், பெருமை பேசும் குணமும், மனிதர்களைப் போல, மரங்களையும் விட்டு வைக்கவில்லைபோலும்.

தச்சன் ஒரு மரத்தை தேர்ந்தெடுத்தான். தன் ஆசை மகளுக்காக கட்டிலும், மிகுதியுள்ள மரத்தில் ஊஞ்சல் செய்ய, ஆணழகன் மரத்தைத் தேர்ந்தெடுத்தான் தச்சன். ஆணழகனுக்கும் மிகுந்த மகிழ்ச்சி. தன்னை தேர்ந்தெடுத்ததற்காக அந்த தச்சனுக்கு தன்னால் இயலும் வரை உதவிடும் முனைப்போடு ஆயத்தமானது. மரம், செடி, கொடி இவை எல்லாம் உயிரற்றவை என்றாலும், முற்காலத்தில், மரத்தை வெட்டுவதற்கு முன் அதனிடம் அனுமதி பெறுவராம். தச்சனும் அவன் தேர்வு செய்த மரத்திடம் அனுமதி கோரி, அதன் முன் மண்டியிட்டு, கை நீட்டி, தன் மகளுக்காக இந்த ஊரில் யாரும் இதுவரை செய்திராத கட்டிலை செய்ய தனக்கு உதவும் படி கேட்டான், அப்பொழுது அடித்த பலத்த காற்றில் ஒரு சிறு துணை கிளை உடைந்து அவன் மடியில் விழுந்தது. இதுவே மரம் தந்த பதில் என்று கூறி அவன் மிகவும் சந்தோசமுற்றான். மரத்திற்கோ தன்னை வெட்ட போகிறான் என்ற வருத்தம் துளியும் இல்லை. மாறாக, தன்னிடம் அனுமதி வாங்கி வெட்டும் இந்த தச்சன் எவ்வளவு உயரிய குணம் படைத்தவன் என்று எண்ணி மகிழ்ந்தது. அவன் வெட்ட தொடங்கிய உடனே அதற்கு வலித்தாலும் அதை தாங்கிக் கொண்டு அவன் தன்னிடம் அனுமதி கேட்டான் என்பதற்காக பொறுத்துக் கொண்டது. தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வளைந்து கொடுத்து அவன் அந்த மரத்தை இலகுவாக வெட்டுவதற்கு வழிவகை செய்தது. தச்சனும் மரத்தை அவனுக்கு வேண்டிய அளவுகளில் வெட்டி அதை தனது வண்டியில் ஏற்றிக் கொண்டு கிளம்பினான். காட்டிலிருந்து வீட்டுக்கு வரும் வரை மரத்திற்கு இருப்பு கொள்ளவில்லை. என்னை வைத்து எவ்வாறு அந்த கட்டிலை வடிவமைக்கப் போகிறான் என்று கற்பனை செய்த வண்ணம் இருந்தது,

தச்சனும், இந்த ஊரிலேயே யாரும் இப்படி ஒரு கட்டிலை செய்திருக்கக் கூடாது என்ற முனைப்புடன் சாட்டையை சுழற்றி வண்டியை வேகமாக ஓட்டினான். மகளின் மீது அவன் கொண்ட பாசம், அவளுக்கு பிடித்தமான தெனாலிராமன் புத்தகம், பேனா, தஞ்சாவூர் பொம்மை, பல்லாங்குழி, கோவில், கோபுரம், மல்லிகை பூந்தோட்டம், எழுத்துப் பலகை என அத்தனையும், அவள் தலை சாய்க்கும் இடத்தில் செதுக்குவதில் வெளிப்பட்டது. மரத்திற்கு, தான் ஒரு திறமைசாலியிடம் தான் வெட்டு பட்டிருக்கிறோம் என்பதில் பேரானந்தம். அந்தப் பெண் பெரிய அதிர்ஷ்டசாலி. நானும் தான் அதிர்ஷ்டசாலி. எனக்கு வலிக்காமல் எவ்வளவு நிதானமாக இந்த வடிவங்களை எல்லாம் செதுக்குகிறான். வடிவமைத்து முடித்து எவ்வளவு அழகாக நான் மிளிர்கிறேன், என்று மனதுக்குள் பூரித்தது.

சில மாதங்களுக்கு முன் சந்தையில் ஒரு ஆட்டுக்குட்டியை வாங்கினான். அதை அவனும், அவன் மகளும் மிகப் பிரியமாக வளர்த்தனர். அவர்கள் வீட்டில் ஒரு குடும்ப உறுப்பினர் போலவே அது நடத்தப்பட்டது. கல்யாண தேதியும் நெருங்கியது. குல தெய்வத்திற்கு படையல் போட வேண்டும் என்பதற்காக குடும்பத்தார் அனைவரும் கோவிலுக்குச் சென்றனர். அவர்கள் வழக்கத்தில் ஆடு பலி கொடுத்து பிரார்த்தனை நிறைவேற்றுவர். நல்ல அழகான சிறிய கருத்த ஆடு. ஆம் தன் குடும்பத்தில் ஒருவர் போல வளர்த்த அதே ஆடுதான். அந்தக் குட்டியை தான் மஞ்சளும்,சிவப்பும் கலந்த பூ மாலை அணிவித்து கயிறு கட்டி கூட்டி வந்தனர், பலி கொடுப்பதற்காக. அது அங்கே வருவதற்கு முன், இதுவரை சாப்பிட்டிராத அத்தனை நற்சுவையான இலை தளைகள் வழங்கப்பட்டது. அது நன்றாக சாப்பிட்ட பிறகு அதை கோவில் கருவறைக்கு முன் கொண்டு வந்தார்கள். எப்படி மரத்தை அறுக்க ரம்பம் பயன்படுத்தப்பட்டதோ அதேபோல் ஆட்டை பலி கொடுப்பதற்கு ஆணழகன் மரத்திலான கைப்பிடி கொண்ட ஒரு அரிவாளுடன் ஒருவர் அங்கு காத்திருந்தார். கூட்டத்தில் ஒரு முதியவர் ‘சரிப்பா ஆட்டுகிட்ட ஒப்புதல் கேளுங்க’ என்று கூறினார். இதைக் கேட்ட அந்த அரிவாளின் கைப்பிடியாக இருக்கும் மரம் மிகவும் ஆச்சரியப்பட்டது. இந்த மனிதர்கள் தான் எவ்வளவு நல்லவர்களாக இருக்கிறார்கள் ஒரு பாவச்செயல் செய்யும் முன் அதில் பாதிக்கப்படக் கூடியவர்களிடம் அனுமதி கேட்கின்றார்களே, இந்த மனிதர்களைப் போல் வேறு சீவராசி இருக்க முடியாது. இவர்களுக்கு நான் உதவியாக வந்தேனே அது என் பாக்கியம் என்று பெருமிதம் கொண்டது.

தச்சன் அந்த ஆட்டின் அருகில் சென்று ‘என் மகளுக்கு நல்லபடியாக திருமணம் நடந்து அவள் சந்தோஷமாக வாழ வேண்டும் . அதற்கு உன்னை இந்த கடவுளுக்கு பலி கொடுக்க அனுமதி வேண்டும்’ என்று கூறி தன் கையில் இருந்த மஞ்சள் நீரை அதன் மேல் ஊற்றினான். அந்த காட்சியைக் காண மனம் இல்லாமல், அழுது கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்றாள், அந்த கல்யாண பெண். நீரை ஊற்றியவுடன் , ஆடு தலையை குலுக்கியது. அது ஒப்புதலா அல்லது அந்த நீரின் குளிர்ச்சி தாளாமலா என்பது அந்த ஆட்டுக்கும் கடவுளுக்குமே தெரியும். உடனே அந்த முதியவர் ‘ஆடு சரி சொல்லிருச்சுப்பா இப்ப வெட்டலாம்’ என்று சொன்னவுடன், ஆடு வெட்டப்பட்டது. சட்டியில் குழம்பாகவும், சுக்காவாகவும் கொதித்து விருந்தாகியது.

இப்பொழுதுதான் அந்த மரத்திற்கு மிகவும் கடினமாக இருந்தது தன்னால் ஆன கைப்பிடியைக் கொண்ட அரிவாளைக் கொண்டு, ஒரு உயிரை கொன்று

விட்டனரே என்று அந்த உயிரற்ற ஆட்டைப் பார்த்து மிகவும் அனுதாபப்பட்டது. எவ்வளவு அழுது புரண்டாலும், மாண்டார் மீள்வரோ!

கல்யாணம் நடப்பதற்கு முதல் நாள் இரவு, கல்யாண பெண்ணின் அறை தோழிகளின் சிரிப்பிலும், கேலி பேச்சிலும் நிறைந்து இருந்தது. கல்யாணப் பெண் தன் தந்தை தனக்காக செய்த புது ஊஞ்சலில் அமர்ந்திருந்தாள். அவள் முகம் வாடிப் போய் இருந்தது. வீட்டைப் பிரிய மனமில்லாமல் வருந்துகிறாள் போலும், என்று ஊஞ்சல் வடிவத்தில் இருந்த மரம் எண்ணியது. தோழிகள் அனைவரும் மாப்பிள்ளை அழைப்பிற்காக சென்றனர். அவள் ஊஞ்சலில் சற்று தலை சாய்த்து களைப்பில் அசந்து உறங்கிப் போனாள். கனவுலகில் அந்த ஊஞ்சல் முகம், கை, கால் என உருவெடுத்து அவளை தட்டி எழுப்புவது போல் இருந்தது. அவள் கரம் பிடித்து , அவளை வனத்திற்குள் அழைத்துச் சென்றது. பல வண்ண பூக்கள் அந்த வனம் முழுவதும் மலர்ந்து கண்களுக்கு ரம்யமாக காட்சி தந்தது. மானும், மயிலும், முயலும், நரியும், கரடியும் அங்குமிங்கும் ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருந்தன. அவள் பாதம் படும் இடமெல்லாம் பூக்கள் பூத்து சிவப்புக் கம்பளம் விரித்தார் போல் அவள் வழித்தடத்தை மென்மையாக்கியது. இனிமையான தென்றல் காற்று அவளை மெல்ல வருடிச் சென்றது, இதமாக. மாலை மங்கும் நேரத்தில் சூரிய கதிர் பட்டு இலைகளெல்லாம் தங்க நிறத்தில் மிளிர்ந்தன. ஓடை நீரோட்டம் சலனமில்லாமல், மெல்லிய இசையைத் தாங்கிச் சென்றது. வானின் நீலமும், பாசியின் பச்சையும், அந்த ஓடையில் வாழும் பல வண்ண மீன்களும், அந்த வனத்தின் அழகைக் கூட்டின. அவளுக்கு இது ஒரு காடாக தெரியவில்லை, மாறாக இந்த பிரபஞ்சத்தின் நடு புள்ளியாக, இதயத்துடிப்பாக காட்சியளித்தது. அவள் கனவில் தான் இதை அனுபவிக்கிறாள் என்றாலும், இதுவரை எந்த கனவிலும் இவ்வளவு அழகான காட்டை அவள் கற்பனை கூட செய்ததில்லை.

இவ்வாறு அவள் தன்னை மறந்து, வனத்தின் வனப்பில் மயங்கிய தருணத்தில் கால் இடறி கீழே விழுந்தாள். வெட்டப்பட்ட ஆணழகன் மரத்தின் அடிப்பாகம் தடுக்கியது. ஊஞ்சல் உருவில் இருந்த மரம்,அது தான் என்றும், பின் அது எவ்வாறு அனுமதி கேட்டு வெட்டப்பட்டது என்றும் அந்த மரமே விவரித்தது. அதைக் கேட்டு அவளுக்கு ஆச்சரியமும், அதிர்ச்சியும் கலந்து மனம் குழம்பி அந்த வெட்டப்பட்ட மரத்திலேயே அமர்ந்தாள். மரமோ அவள் குழப்பத்தை அறியாமல், தன்னை தச்சன் எவ்வளவு நேர்த்தியாக கையாண்டான்,தன்னை எவ்வளவு உபயோகமான பொருளாக மாற்றி இருக்கிறான் என்று கூறி ஆனந்தம் அடைந்தது. ஒரு அழகிய வேலைப்பாட்டுடன் ஆன கட்டில், ஊஞ்சல், மரப்பெட்டி என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது, மரம் அந்த பெண்ணின் முகம் வாடி கலை இழந்து இருப்பதை கவனித்தது, அவளிடம் இருந்து வந்த அனல் மிகுந்த பெருமூச்சின் வெப்பம் தாளாமல், அவளை சுற்றி இருந்த அனைத்து மரங்களும், உயிர்பெற்று, அவளை நோக்கின. அவள் தன் மனகுமுறலை பகிரலானாள். 'உங்களை உயிரற்ற மரம் என்று மனிதர்கள் கூறுவார்கள். ஆனால் அது முற்றிலும் தவறு. நீங்கள் மனிதர்களை விட அறிவாளிகள். ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறீர்கள், காற்றின் வழியே, வேர்களின் வழியே, மௌனத்தின் வழியே. மனிதர்கள் உங்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை - பொறுமையை, அமைதியை, காலத்தின் உண்மையான அர்த்தத்தை. ஆனால் அவர்கள் அவற்றை

உற்று நோக்குவதில்லை. ஒரு மரத்தை வெட்டுவதற்கு முன்னாடி அது கிட்ட அனுமதி கேக்குறாங்க. ஒரு ஆட்டை வெட்டுவதற்கு முன்னாடி அதுகிட்டயும் அனுமதி கேக்குறாங்க. வாய் பேச முடிஞ்ச மூளைய உபயோகிக்க முடிகிற என்கிட்ட, உனக்கு இந்த திருமணம் வேணுமா வேணாமா என்று ஏன் யாரும் கேட்க மாட்டேங்கிறாங்க. எனக்கு எல்லாத்தையும் பார்த்து பார்த்து செய்யற அப்பா கூட என் ஆசையை ஏன் கேட்க முனையவில்லை, உனக்கு இந்த மாப்பிள்ளை பிடிச்சிருக்கா? அப்படின்னு ஒரு வார்த்தை கேட்கலையே. என்னாலையும் எதையுமே சொல்ல முடியாம இந்த சமூக கட்டமைப்புக்குள்ள சிக்கிட்டு, அம்மா அப்பாவுக்கு கெட்ட பெயர் வாங்கி தந்துட கூடாதுன்னு, அமைதியா அந்த ஆடு புரியாமல் தலையாட்டுச்சு பார் வெட்டுவதற்கு முன்னாடி, அது மாதிரி அமைதியா உட்கார்ந்து இருக்கேன்' என்றாள். தச்சனை உயர்வாக நினைத்த அத்தனை மரங்களும், புருவம் சுருக்கி நின்றன. அவள் மேலும் தொடர்ந்தாள். என்னைப் போன்ற பெண்ணுக்கெல்லாம், வேற வழியே இல்லை, ஒரு வயசு வந்த உடனே கல்யாணம் பண்ணனும், யாருன்னு தெரியாத ஏதோ ஒரு இடத்துக்கு போய் அங்க இருக்குற புது உறவுகளுக்கு முன்னாடி நமக்கு நல்லா சமைக்கத் தெரியும், வீடு கூட்டத் தெரியும், கணவனுக்கு பணிவிடை செய்யத் தெரியும், நல்லா துவைக்க தெரியும், நல்லா குடும்பம் நடத்த தெரியும், இப்படி எல்லாத்தையும் அவங்க முன்னாடி நாங்க உறுதி செய்து கொண்டே இருக்கணும். ஆனா எனக்கு இலக்கியமா எழுத தெரியும், தெளிவா பாடம் சொல்லிக் கொடுக்க தெரியும், அருமையா வரைய தெரியும், எனக்கு ஆசிரியர் ஆக வேண்டும் என்கிற கனவு இருக்கு. இதெல்லாம் நான் எப்ப சொல்லுவேன். இதை கேட்டுக்கொண்டிருந்த மரங்களுக்கு இன்னும் தூக்கி வாரிப் போட்டது. அந்தப் பெண் மேலும் தொடர்ந்து , தனக்கு பரிசாக வந்த பேனாவைப் பற்றி கூறினாள். அது அவளுக்கு அவளின் ஆசிரியர் பரிசாக கொடுத்தது. வருடா வருடம் அவள் பள்ளியில் நடக்கும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி அனைத்திலும் பங்கேற்று ஏதாவது ஒரு பரிசைத் தட்டிச் செல்வாள். ஒரு முறை நடந்த கட்டுரை போட்டியில் இவள் எழுதிய கட்டுரைக்கு இரண்டாவது பரிசு தான் கிடைத்தது, ஆனாலும் அவளுடைய ஆசிரியர் அந்த கட்டுரையை அனைவர் முன்னிலையிலும் படித்து அவளை வெகுவாக பாராட்டினார், அந்த பேனாவை அவளுக்கு பரிசளித்தார். அது அவளுக்கு மிகவும் மனதிற்கு நெருக்கமான ஒரு பேனா. இவை அனைத்தையும் கேட்டு மனம் நொந்த ஆணழகன் மரத்திற்கு, இப்பொழுது தான் வலித்தது, கோடாலியால் வெட்டும் போதும், உளியால் செதுக்கும் போதும், ரம்பத்தால் அறுபடும் போதும் இல்லாத வலி அது. அந்த மரம் அடைந்த அத்துனை மகிழ்ச்சியும் அவள் பேசிய வார்த்தைகளின் முன்பு பொசுங்கிப் போனது. அவளுக்கு வரப்போகும் கணவன் அவளின் நியாயமான ஆசைகளை பூர்த்தி செய்பவனாக இருக்க வேண்டும் என்று அந்த மரங்கள் அனைத்தும், வன தேவதையிடம் பிரார்த்தனை செய்தன.

ஊஞ்சலை தடவியபடி கண் விழித்தாள். அவளுக்கு பேனா பரிசு வாங்கி தந்த கட்டுரையின் பக்கங்கள் சிதறிக் கிடந்தன, அதன் தலைப்பு 'பெண் சுதந்திரம்'.

மாப்பிள்ளை ஊர்வலம் முடிந்து, ராசா போல மாப்பிள்ளை வந்து இறங்கினான். 'பாரதியார் கவிதைகள்' புத்தகத்தை கையில் பத்திரமாக வைத்திருந்தான், புதுமைப் பெண்ணின் கவிதைகளை கோடிட்டு காட்டிய பக்கங்களோடு, தன் வரப்போகும் துணைவி கண்மணிக்கு பரிசாக அளிக்க.

# விவாகரத்து



பவித்ரா
ராகவன்




சில்லென்று வீசும் காற்று மனதை வருடிச் சென்ற கொள்ளை அழகு நிறைந்த இயற்கை. அவசரமாய் பச்சிளம் குழந்தையை ஸ்ட்ரோலரில் வைத்துத் தள்ளியபடி நடக்கும் சீனப்பெண். வேலைக்குச் செல்வோரை ஏற்றியவாறு அடுத்தடுத்து CBDஐ நோக்கிப் பயணிக்கும் துரித ரயில்கள். ஹெட்போனை போட்டுக் கொண்டு தலையை அசைத்தவாறு தமக்குள் சிரிக்கும் இளைஞர். புறப்பட இருக்கும் ரயிலில் ஏறுவதற்குப் படிகளில் விரைந்து ஏறிக்கொண்டிருக்கும் பாடசாலை மாணவி. இவ்வாறு Rushall புகையிரத நிலையம் பரபரப்பாக இருந்தது. நானோ எந்தவித படபடப்பும் இன்றி அமைதியாக நின்றிருந்தேன். என்னுடைய படபடப்பெல்லாம் நேற்றோடு முடிந்துவிட்டது. ஒரு யுத்த காண்டமே நிறைவடைந்துவிட்டது. இது எனக்கான நாள். எனது வாழ்க்கை. எனது மகள். எனது எதிர்காலம். இதுவே எனது சிந்தனையில். இதற்கு மேலும் நடந்த விடயங்களைப் பற்றிக் கவலைப்படுவதில் அர்த்தமில்லை. நினைத்து வருந்துவதால் எதுவும் மாறப் போவதும் இல்லை. எல்லாம் சொல்வதற்கு இலகுதான். முடிகின்ற விடயமா? ஐந்து வயது மகள் விதுராவின் முகம் வந்து போனது. கடைசியாக எல்லாவற்றையும் ஒருமுறை அசைபோட்டுத் தூரத் தூக்கிப் போட்டுவிடு என்றது மனது. தேவையில்லை என்றது அறிவு. மனதை மீறி அறிவு ஜெயிக்குமா என்ன? காலம் பத்து வருடங்கள் பின்னோக்கி நகர்கிறது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் மூன்றாம் வருடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். பட்டாம்பூச்சிகளாய் திரிந்த காலம். பல்கலைக்கழக விடுதி, குறிஞ்சிக் குமரன், கண்டி ஐயர் கடைச் சாப்பாடு எனக் கஷ்டமே தெரியாத காலம். அந்தக் காலப் பகுதியில்தான் திவாகரின் பெற்றோரை எனது சித்தப்பா மகளின் திருமணத்தில் முதன் முதலில் சந்தித்தேனாம். சொல்லப் போனால் அவர்கள் முகத்தைக் கூட அன்று நான் பார்த்தேனா என்று எனக்குத் தெரியாது. சித்தப்பா மகளின் திருமணம் முடிந்து ஒரு வாரம் இருக்கும். அப்பாவிற்கு சித்தப்பாவிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்திருந்தது. திவாகரின் பெற்றோருக்கு என்னைப் பார்த்ததும் பிடித்து விட்டதாம். ஆஸ்திரேலியாவில் உள்ள இளைய மகன் திவாகருக்கு என்னைப் பேசி முடிக்க சித்தப்பாவை அணுகி

இருந்தார்கள் போலும். அப்பாவும் திவாகரின் அப்பாவும் ஒரே ஊர்தானாம். சித்தியின் தங்கை கல்யாணம் முடித்தது திவாகரின் அம்மாவின் ஒன்றுவிட்ட தம்பியின் மனைவியின் தம்பியையாம். இவ்வாறு ஒருவாறாகப் பூர்வீகங்களை அலசி ஆராய்ந்து திருமணம் நிச்சயக்கப்பட்டது. பெண்பார்க்கும் படலம் அவசரமாய் மணமகனின்றியே நடந்தது. Whatsapp callஇல் சம்பிரதாயத்துக்கு முகத்தைக் காட்டினார் மாப்பிள்ளை. மாப்பிள்ளையைப் பற்றி மெல்பேனில் இருக்கும் பெரிய அண்ணாவின் மூத்த மகளிடம் விசாரிக்கட்டுமா என அம்மா கேட்க "அதுதான் ஒரே ஊராச்சே" என்று ஒரே வார்த்தையில் அம்மாவின் வாயை மூடினார் அப்பா.

எனக்கோ எல்லாம் கனவாய் இருந்தது. ஊர், பழக்கவழக்கங்கள், அந்தஸ்து என அடிக்கடி அம்மா சுப்ரபாதம் பாடிப் பாடி காதல் என்றால் கைகூடாது என்பது எனக்குச் சின்ன வயதிலிருந்தே புரிந்ததாலோ என்னவோ அதைப் பற்றி நான் ஒரு நாளும் யோசித்ததில்லை. பல்கலைக்கழகம் முதலாம் ஆண்டிலிருந்து என் பின்னாலேயே சுத்திய முரளியிடம் பக்குவமாய் இது சரிவராது என நான் சொல்ல அவனும் பவ்யமாய் விலகிக் கொண்டான். ஒருவாறாகப் பரீட்சையை முடித்துவிட்டு திருமதி திவாகராக ஆஸ்திரேலியாவில் காலடி எடுத்து வைத்தேன்.

" வேலைக்குப் போகட்டுமா" என்று கேட்க "இங்க much experience உடையவர்களுக்கே no work. நீர் no experience" என்று அன்பாய் ஆணாதிக்க சிந்தனையை எனக்கே புரியாமல் விதைத்தான். ஆரம்பத்தில் எல்லாம் இனிப்பாகத்தான் இருந்தது. வாரம்தோறும் நண்பர்கள் வீட்டில் வரவேற்பு விருந்து. மாலை 6 மணிக்குச் சென்றால் நள்ளிரவு மூன்று மணி தாண்டும் வீடு வந்து சேர. எனக்கும் எல்லாம் பிடித்திருந்தது. வருடங்கள் நான்கு வசந்தங்களாய் கடந்தன.

காலம் செல்லச் செல்ல திவாகரின் பொறுப்பற்ற தன்மையும் உல்லாச வாழ்க்கையும் எனக்குக் கோபத்தை வரவழைத்தது. குறிப்பாக விதுரா பிறந்த பின்னர் அவளைப் பார்த்துக் கொள்வதிலேயே எனது முழு நேரமும் செலவானது. கோவிட் பெருந்தொற்றுக்கால ஆரம்பத்தில்தான் விதுரா பிறந்தாள். பெற்றோரால் கூட இங்கு வர முடியவில்லை. ஆஸ்திரேலியா தன் எல்லைகளை மூடி நாட்டை வேண்டுமானால் கோவிட்டில் இருந்து பாதுகாத்து இருக்கலாம். ஆனால் எனது வாழ்க்கையே இந்தக் காலப் பகுதியில் தடம் புரண்டு விட்டது. கன்பராவிற்கு வேலை நிமித்தம் சென்றிருந்த திவாகர் அங்கேயே தங்க வேண்டியதாயிற்று. நான் தனியே கைக்குழந்தையுடன் மல்லுக் கட்டிக் கொண்டிருந்தேன். தொலைபேசி ஆறுதல்களும் அறிவுரைகளும் எனக்கு ஏட்டுப் பாடமாகவே இருந்ததே தவிர, கை கொடுத்து உதவவில்லை.

ஒருவாறாக திவாகர் இரு மாதம் கழித்து மெல்பேன் வந்தார். ஆசையாய் காத்திருந்த எனக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. அவரது இயல்பு நன்கே மாறி இருந்தது. என்னிடமோ என் பிள்ளையிலோ எந்த ஈடுபாடும் காட்டவில்லை. அடிக்கடி யாரோ ஒருத்தியுடன் தொலைபேசி உரையாடல். நாட்கள் நகர சில நொடி உரையாடல் மணிக்கணக்கில் நீண்டது. அவர்கள் என்ன கதைப்பார்கள் எனக்குத் தெரியவில்லை. அறைக் கதவுகளைப் பூட்டிக்கொண்டு கதைத்தால் கேட்கவா போகிறது. யார் எனத் தெரிந்து கொள்ள நான் கேட்ட கேள்விகள் அவர் காதுகளில் விழவே இல்லை. காலப்போக்கில் விரிசல் விவாதமானது. அதுவே விவாகரத்துக்கு வித்திடவும்

செய்தது. தினசரி சண்டை சச்சரவாக வீடே அமைதி இழந்தது. நண்பர்கள் சமரசம் செய்ய முனைந்தும் அது கைகூடவில்லை. எனக்கு என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. வெளிநாட்டு வாழ்க்கையில் அத்துணை வசதி இருந்தும் வெறுமையே எஞ்சியிருந்தது. பெற்றோருடனான உரையாடலும் என் மன வேதனையைத் தணிக்கவில்லை. தணிக்கத்தான் முடியுமா. சில சமயம் திவாகரை பார்க்கும்போது எல்லாவற்றையும் தூக்கிப்போட்டு விட்டு மீண்டும் ஒரு வாழ்க்கையை ஆரம்பிப்போமா எனக் கேட்கத் தோன்றும். ஒரு நாள் கேட்கவும் செய்தேன். பதில் அதே மௌனம்தான். ஏதோ சொல்ல வந்தவர் சொல்லாமலேயே அறைக்குள் சென்று விட்டார்.

ஒருநாள் வழமையான வாக்குவாதம் பெரும் சண்டையாகவே வெடித்தது. கோபத்தில் காரை எடுத்துக்கொண்டு போனவர் வரவே இல்லை. விவாகரத்து அறிக்கைதான் வந்தது. இதற்கு மேல் யாரையும் வற்புறுத்தி வாழ என் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. நானும் எனக்குத் தெரிந்த நண்பியினூடாக "லீகல் எய்ட்" உதவியுடன் விவாகரத்து வழக்கினை கொண்டு சென்றேன். இதில் வேடிக்கை என்னவென்றால் நாம் இருக்கும் வீடு மற்றும் கார் அனைத்தையும் எனக்கே ஜீவனாம்சமாகக் கொடுக்கிறாராம். எல்லாவற்றையும் கிழித்து முகத்தில் எறியத்தான் தோன்றியது. ஆனாலும் இது விதுராவின் எதிர்காலத்திற்குக் கைகொடுக்கும் என மௌனம் காத்தேன். பல்கலைக்கழக பட்டம், எனக்கென்று உத்தியோகம், அடிமைத்தனம் அற்ற பெண்ணுரிமை என நான் பேசிய பெண்ணியம் என்னைக் கேலி செய்தது. "ஒரே ஊர்தானே, எல்லாம் எங்கட ஆட்கள்தான்" என்ற அப்பாவின் உத்தரவாத வார்த்தைகள் வெறும் கானல் நீராயின. அப்பாதான் அப்படிச் சொன்னார் என்றால் எனக்கு அறிவு எங்கே போனது. இங்கு வந்த பின்னாவது எனக்கான ஒரு வேலையைத் தேடிக்கொண்டேனா. அதற்குத்தான் அதிகபட்ச முயற்சி எடுத்தேனா. பிறரை நொந்து என்ன லாபம். பட்டதாரி மாணவி இன்று McDonalds ஒன்றில் பகுதி நேர ஊழியராக வேலை செய்கிறேன். இதைவிட single mum pay என்று அரசாங்கத்தின் அனுதாபக் காசு. ஏதோ புண்ணியத்தால் வீட்டு வாடகை கட்டத் தேவையில்லை. அது கட்டியவன் கொடுத்த நஷ்ட ஈடாம். பணத்திற்குப் பெரிதாகக் கஷ்டமில்லை. மனக் கஷ்டத்துடன் ஒப்பிட்டால் பணக்கஷ்டம் ஒரு பொருட்டல்ல. திவாகரை நான் பார்த்து எட்டு மாதங்கள் கடந்துவிட்டன. எல்லாமே ஆன்லைன் மூலம் என்பதால் வழக்குக் காலப்பகுதியில்கூட அவரைச் சந்திக்கவில்லை. அவர் சார்ந்த நண்பர் எவரையும் சந்திப்பதில்லை. எல்லா தொலைபேசி இலக்கங்களையும் block செய்து 8 மாதமாகிவிட்டது. நான்கு மாதத்திற்கு முன்னர் திவாகரின் பெற்றோரை dandenong marketல் கண்டதாகவும் கதைக்கவில்லை என்றும் ஒன்றுவிட்ட அண்ணன் சொன்னான். என்னுடைய விவாகரத்துக்குப் பிறகு அப்பாவும் எங்கள் ஊர் என்று யாருக்கும் சொல்வதில்லை. சொல்லப் போனால் ஊர்காரர்களின் கண்ணில் படுவதே இல்லை. சித்தப்பா குடும்பத்துடன் தொடர்பும் இல்லை. ஆனால் ஊர்தான் என்ன செய்தது. சித்தப்பாதான் என்ன செய்தார். ஆனாலும் கடந்த மூன்று நாட்களாக புதுப்புது இலக்கத்திலிருந்து 20 phone calls. "ஹலோ நான் திவாகரின்.." சொல்லி முடிப்பதற்குள்ளே பட்டென்று துண்டித்துக் கொண்டேன். மீதம் 19 கோல்களையும்

எடுக்கவே இல்லை. வந்திருந்த குறுஞ் செய்தியையும் பார்க்க மனம் சம்மதிக்கவில்லை. சரி போதும். முடிஞ்சது முடிஞ்சதுதான். எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளியிட்டு எனது ரயிலில் ஏறிக்கொண்டேன்.

“நலம் வாழ என்னாளும் என் வாழ்த்துக்கள்” இளையராஜாவின் இசை என்னை ஆர்ப்பரிக்க தொடங்கியது. புதிய அத்தியாயத்தை நோக்கிப் பயணிக்கிறேன். விடுதலைக் காற்றைச் சுவாசிக்கின்றேன்.

அழைக்கப்பட்ட 20 கோல்களுக்கு ஒரு மறுகோல் எடுக்கப்படாதவரையும், குறுஞ்செய்திகள் வாசிக்கப்படாதவரையும் உன் ஊரையும் உறவையும் நீ தேடாதவரையும் உன் புதிய அத்தியாயம் அமைதியாய் தொடரும். திவாகர் ஏன் உன்னை பிரிந்தான் என்பது உனக்குத் தெரியாமல் இருக்கும் என்று விதி சொல்லியது என் காதுக்குள் கேட்கவில்லை. அதற்குள் கண் பட்டது போலும்.

ஒரு கையின் தொடுகையை உணர்கிறேன். “சுதா நீங்க இங்க எப்படி”.. திவாகருடன் முன் வேலை செய்தவர். ”எல்லம் முடிந்து விட்டதா? இப்படி சின்ன வயதில் திவாகர்” அவர் சொன்னது எதுவும் சரியாக கேட்கவில்லை. நிறுத்தி வைத்த கையடக்க தொலைபேசியை ஆன் செய்கிறேன். வந்திருந்தவை குறுஞ்செய்தி அல்ல. நடந்த அனைத்தையும் விளக்கிச் சொல்லும் துயர் செய்தி. அடுத்த புகையிரத நிலையத்தில் இறங்கி விதுராவின் day care நோக்கி விரைகிறேன். அப்பா முகத்தை கடைசியாக காட்டிவிட. எல்லா விவாகரத்தும் விடுதலை அல்ல என்பதை உணர்ந்தவளாய்.




# மௌனம்

இமாம்

தனி ஒருத்தியாக பிள்ளைகளை வளர்ப்பது, சில நேரங்களில் எளிதானது. யார் பிள்ளைகளை வகுப்புகளுக்கு ஏற்றி இறக்குவது என்ற வாக்குவாதங்கள் அவசியமற்றுப் போகும். ஏனென்றால் நான் மட்டுமேதான் அதைச் செய்ய வேண்டும். நேற்றோடு அவர் இறந்து 7 வருடங்கள் கரைந்தோடியும், அவ்வப்போது அவர் நினைவுகள் என்னை நிலைகுலைய வைக்கிறது. ஆனால், அந்த நினைவுகளை எப்படி சமாளிப்பது என்பதுதான் இத்தனை வருடங்களில் நான் கற்றுக்கொண்டது.

நீண்ட நேரம் இதமான சூடான நீரில் குளித்தேன். புதிதாக வாங்கிய சுடிதார்களில் ஒன்றை அணிந்து தயாரானேன். “பிள்ளைகளை அழைத்து வர பள்ளிக்கு இவ்வளவு அலங்கரித்துக் கொள்ளும் ஒரே ஆள் நான்தான்” என்று மனதுக்குள் எள்ளி நகைத்தேன். அதன் காரணத்தையும் நான் அறியாமல் இல்லை. ஆனாலும் ஆர்வத்தோடு தயாரானேன்.

கார் பள்ளியை நெருங்கியபோது, எனக்குள் பரபரப்பு அதிகரித்தது. ஏனோ திடீரென்று, நான் அன்று அவரைப் பார்க்கக் கூடாது என்று எண்ணினேன். ஆனால் அவரைப் பார்க்கத்தானே இவ்வளவு அலங்காரமும். வழமைபோல இன்றும் மனக்குழப்பம் தொடங்கியது. உள்ளே போகாமல், வாகனத் தரிப்பிடத்தில் இருந்து பிள்ளைகளை ஏற்றிக் கொண்டு திரும்பிவிட வேண்டும் என்று முடிவு செய்தேன். வாழ்க்கையில் ஏனோ நினைப்பது ஒன்று நடப்பது இன்னொன்றாகவே இருக்கிறது. காரை வெகு தொலைவில் நிறுத்தி விட்டுத் திரும்பிப் பார்த்தால் இன்னொரு கார் வந்து பக்கத்தில் நின்றது.

“ஹாய், வனஜா, லில்லி உங்களுக்காக ஒரு ஓவியம் கொண்டு வந்துள்ளார், நீங்கள் கிளம்பும் முன் அவளைப் பாருங்கள்” என்று

காருக்குள் இருந்து ஜேம்ஸின் குரல்.

ஓவியம் பற்றிய செய்தி இவ்வளவு நேரமும் என் மனதில் ஓடிய யோசனைகளை ஒரு நொடியில் மறக்கடித்தது. உற்சாகத்தோடு காரில் இருந்து இறங்கி "ஹாய் ஜேம்ஸ், எப்படி இருக்கிறீர்கள்? மறக்காமல் எனக்காக ஓவியம் தயார்படுத்தி இருக்கிறீர்கள்... நன்றி"

'உங்களுக்குத் தெரியும் எனக்கும் லில்லிக்கும் ஓவியம் என்றால் எவ்வளவு விருப்பம் என்று. இரண்டு வாரங்களுக்கு முன்பே அதைத் தயார்படுத்தி விட்டோம். ஆனால் நீங்கள் இன்று பிள்ளைகளை அழைத்துச் செல்ல வருவீர்கள் என்றுதான் இன்று கொண்டுவந்தோம். வாங்கோ, லில்லி உள்ளேதான் இருப்பார்' என்று என் பதிலுக்கு நிற்காமல் என்னை முன்னோக்கிச் செல்ல விட்டார். நான் பள்ளிக்கூடத்திற்குள் வருவதில் இருக்கும் சங்கடத்தைச் சொன்னால் மட்டும் இவருக்கு விளங்கிவிடுமா என்ன? என்று எண்ணியபடியே அவரோடு நடந்தேன்.

என் கணவர் இறந்த வருடம் லில்லிதான் பிள்ளைகளின் வகுப்பாசிரியை. அந்த நேரம் அவரும் பிள்ளையோடு தனியாகத்தான் இருந்தார். அப்படித்தான் அவருடன் பழகத் தொடங்கினேன். நாங்கள் போன ஓவிய வகுப்பின் ஆசிரியர்தான் இந்த ஜேம்ஸ். ஆனால் இப்போது அவர்கள் கணவன் - மனைவி. ஆனால் நான் இப்பவும் தனியாகவே இருக்கிறேன்.

பள்ளி வளாகத்தை அடைந்ததும், நான் எவ்வளவு சொல்லியும், என் கண்கள் அவரைத் தேட ஆரம்பித்தன. 'அவர் எங்கிருக்கிறார் என்று தெரிந்தால் நான் மறுபக்கமாக ஒதுங்கி சென்றுவிடலாம்' என்று எனக்கு நானே அதை நியாயப்படுத்தி கொண்டிருக்கையில், லில்லி வகுப்பறை வராண்டாவிற்கு வந்து சேர்ந்தாள்.

"ஹாய் லில்லி, ஓவியத்திற்கு நன்றி" என்று என் மகிழ்ச்சியை ஒரு பெரிய அணைப்பின் மூலம் வெளிப்படுத்தினேன். மேலும் வேறு பல ஆசிரியர்களும் அங்கு வந்து கூடினர். எல்லோரும் ஓவியங்கள், தோட்டம் எனப் பல விஷயங்களைப் பேச ஆரம்பித்தோம். கலகலப்பாகப் பேசிச் சிரித்தோம்.

பலமுறை யோசித்தும், நான் அப்போது என்ன சொல்லிக் கொண்டிருந்தேன் என்று எனக்கு இன்றுவரை நினைவில் இல்லை. ஆனால் நான் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தபோது, என் முன் இருந்த வகுப்பறைக் கண்ணாடிக் கதவில் அவர் என் பின்னால் நிற்பதைக் கண்டேன். திகைத்துப்போய், பேச்சை இடையில் நிறுத்தி திரும்பி அவரைப் பார்த்தேன். அவரும் சிரித்துக் கொண்டே என் அருகில் வந்து நின்று அந்த அரட்டையில் கலந்து கொண்டார்.

இதுதான் இன்று நடக்கக் கூடாது என்று நினைத்தேன். எனக்கு எப்பொழுது இந்த கூட்டம் கலைந்து போகும் என்று தோன்றியது. ஒருவாறு கூட்டம் கலைய ஆரம்பித்தது. பிள்ளைகள், நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருக்கும் திசை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். அவரும் என்னுடன் பேசிக்கொண்டே நடந்தார்.

எல்லோரும் எங்களைப் பார்ப்பதுபோல உணர்ந்தேன். அந்த இடத்தில் இருந்து மாயமாக மறைந்திட முடிந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆசிரியர் மத்தியில் எந்தவிதமான ஒரு கிசுகிசு இருப்பதையும் நான் விரும்பவில்லை. ஆனால் வெள்ளைக்கார ஆசிரியர் கூட்டம் ஏன் எங்களைப் பற்றி கிசுகிசுக்கப் போகிறார்கள். வெள்ளைக்காரியாக பிறந்திருந்தால் வாழ்க்கை இலகுவாக இருந்திருக்குமோ என்னவோ. கணவர் இறந்ததில் இருந்து, என்னுடைய பெரும் பயம், பலரும் பலவிதமாக கதைப்பார்கள் என்பதுதான்.

அன்னப்பறவை வெளிப்பார்வைக்கு அமைதியாக நீந்துவது போல இருந்தாலும் நீருக்குள் எவ்வளவு வேகமாக கால்களை அடிக்கிறதோ, அதுபோலத்தான் நானும். இந்த வாழ்க்கைத் தரத்தையும் சமூக வட்டத்தையும் பராமரிக்க எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுச்

செய்து கொண்டு இருக்கிறேன். நாற்பது வயதில், 16 வயது இரட்டைப் பிள்ளைகளை ஒரு புலம்பெயர்ந்த நாட்டில் தனியாக வளர்ப்பது அவ்வளவு எளிதல்ல. அவர் இறந்தபோது பிள்ளைகளுக்கு 8 வயது. அப்போ ஒரு விதமான பிரச்சனை என்றால் இப்போ கட்டிளமைப் பருவத்தில் பிள்ளைகளைக் கையாள்வது இன்னொரு விதமான பிரச்சனை. சில வேளைகளில், என் நண்பர்களின் வாழ்க்கையைப் பார்க்கும்போது, 'ஏன் என் வாழ்கை மட்டும் இப்படி இருக்கிறது?' என்ற எண்ணம் வரும். உடலும் மனமும் சோர்வாக இருந்தால் வேறு எப்படிப்பட்ட எண்ணங்கள் வரும்?

இதையெல்லாம் விட கொடுமை கதைப்பதற்கு கூட ஆள் இல்லாமல் இருப்பது. எங்கேயாவது போய் வந்தால், அங்கு நடந்த விஷயங்களை விடுப்புக் கதைக்கக்கூட யாரும் இல்லை. அந்த வெறுமையை சாகும் வரை அனுபவிக்க வேண்டும் என்ற நினைப்பே என்னை அவருடன் கதைக்கத் தூண்டியது. இதெல்லாம் எங்கே போய் முடியும் என்று எனக்குத் தெரியும். வார இறுதியில் வீடுகளில் நடக்கும் பார்ட்டிகளில் என்னைப் பற்றித்தான் விடுப்புக் கதைகள். இங்கு எல்லாருக்கும் எல்லாரையும் தெரியும். அதனாலேயே நான் ஆண்களுடன் பழகுவதைத் தவிர்த்தேன். எனக்கு இது வேண்டாம்.

ஆழமாக யோசித்தால் எனக்கு உண்மையாகவே வேண்டாமா, அல்லது எங்கள் சமூகத்திற்கு பயந்து வேண்டாம் என்று நினைக்கிறேனா. சமூகத்தை விட்டாலும், என் பிள்ளைகள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என் மாமனார், மாமியார் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? ஏன் இறந்துபோன அவர் மேல இருந்து என்னைப் பற்றி என்ன நினைப்பார்? என் சொந்தப் பெற்றோர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? அவர்கள்தான் இப்ப உயிரோடு இல்லையே. உயிரோடு இருக்கிற என் விருப்பத்தை விட உயிரற்றவர்களின் விருப்பதையெல்லாம் யோசிக்க வேண்டி இருக்குது... வெள்ளைக்காரியாக பிறந்திருந்தால் இப்படியெல்லாம் யோசிக்க வேண்டியிராது.

தேடித் தேடிப் பார்க்கிறேன், எங்கள் சமூகத்தில் எங்கேயாவது ஒரு மறுமணம் நிகழ்கிறதா என்று. ஒன்றையும் காணோம். வெள்ளையரின் மறுமணத்தையும் இழிவாகப் பேசுகிறார்கள். யாராவது மறுமணம் பற்றி என்னிடம் பேச மாட்டார்காளா என்றெல்லாம் யோசித்திருக்கிறேன். இந்த 7 வருடங்களில் யாரும் அது பற்றிப் பேசவே இல்லை. ஆனால் தங்கள் 38 வயது மகளுக்கு என்னிடமே வரன் தேட சொல்கிறார்கள். ஒரு நாள் hair highlight பண்ணியதற்கே midlife crisis என்று கதை கேட்க வேண்டி இருந்தது. இப்ப போய், எனக்கு ஒருத்தரை பிடித்திருக்கிறது என்று சொன்னால் எத்தனை பேர் எத்தனை விதமாக கதைப்பார்கள்.

“வனஜா... என்ன யோசனை?” என்ற அவர் குரல் என்னை உலுக்கியபோதே நான் நிஜ உலகிற்கு திரும்பினேன்.

“ஏன் வனஜா ஏதும் பிரச்சனையா?” என்று நடப்பதை நிறுத்தி, திரும்பி என்னை பார்த்து கேட்டார்.

இந்தப் பரிவைத்தான் எதிர்பார்க்கிறேன். ஆனால் அது ஒரு தீ. என் மூளையில் குடைந்து கொண்டிருக்கும் எல்லாவற்றையும் அவரிடம் கொட்டித் தீர்த்து விடலாம். அப்போது அந்த தீ குளிருக்கு இதமாகவும் இருக்கும். ஆனால் அதே தீ என் வாழ்க்கையை அழித்து விடவும் கூடும்.

அவர் கண்களைப் பார்த்து “Bye” என்று சொல்லிவிட்டு, பிள்ளைகளைக் காரை நோக்கி வருமாறு சைகை செய்து மௌனமாக காரை நோக்கித் தனியாக நடக்க ஆரம்பித்தேன்...

வீட்டுக்கு வந்து... பிள்ளைகளுக்குச் சாப்பாடு பரிமாறி... சோபாவில் சாய்ந்து வழக்கம் போல அமேசன் தொடரைப் பார்க்கத் தொடங்கினேன்.

# Wellbeing Through Challenging Times


Paru Ramesh

Turning 50 is about celebrating, looking back to see one's life journey and looking forward to what the future holds right? Sometimes however, the universe has a way of putting everything into perspective when one's hope and optimism are tested.

Losing my brother and mum, 2 years in a row prior to turning fifty, left me as the only surviving member of my family. Depression was something I was confident would not touch me, and yet the tragic circumstances of my beloved ones passing and coping with reality made me go into a place where I lost my ability to have a conversation, think and function.




The recovery was very slow as I was trying my best to come out of depression with support from my husband, my children, friends and the kindergarten community where I work as an early childhood teacher for the past 22 years.

It was during this period that I turned 50 and completed the Bowel Cancer free test that was sent home by the government. I was diagnosed with Stage 3 bowel cancer after further investigation. I was clear from the beginning that I would not hide this upcoming challenge with anyone. I wanted to create awareness to ensure that everyone I knew paid attention to their health and wellbeing.

This piece of writing is one story out of many that helped me to learn, reflect and appreciate this life that has been given to me.

I remember that on a Monday morning, I opened

the kindergarten door and could see all the families and children eagerly waiting to come in. After greeting the children and asking them to get ready for morning group learning time, I asked the families to wait for a few minutes.

I remember after a few seconds of silence and tears, I broke the news to the families. I could see some mums starting to cry. I assured them that they were not going to get rid of me that easily. I requested permission from the families to share this news with my four and five-year-old pattus (I call my kinder children pattus meaning darling in Tamil), in a way that would be easy for them to comprehend.

I knew that I needed them as much as they needed me in this journey. I was not going to exclude myself, as a kindergarten teacher, rather include my kindergarten community through shared understanding in this situation.

During group time, I asked my pattus a question, "Who gets sick?"

"Me!" "My dad was sick!" "My grandpa is in heaven!" "My dog was sick and went to the doctor!"

I asked them what they would do if they were sick.

"Go to the doctor!" "Get a needle!" "Drink medicine!" "Sleep!" "Don't come to kinder!" "Get a cuddle from mummy!"

So many responses. So many stories. So many emotions from my pattus.

"I have something to tell you. I am sick now. Sometimes we get a cold or a cough, right. I am sick with something called cancer. It's like a yucky germ that is growing inside me. I must go to the hospital for the doctor to take this out of my body. I will not be in kinder for a long time. Do you have any questions?" I asked.

"Are you going to stay there forever?" "Do you need medicine?" "Are you going to die?" "Is the doctor going to do an operation?".

I explained to them that I did not know what the doctor was going to do, but I was certainly not going to die as I had to come back to have more fun with my pattus.

There was however one honest pattu who was disappointed that I was not going to die, as he had already worked out that he would be the next "boss" at kinder, if I did not return.

My family, friends, my kinder pattus, my educator team and I needed each other to get through this phase. I was determined to continue in my role, focussing less on the challenging times and investing as much time as possible in maintaining connections with my pattus, families and my team as I embarked on this surgery, chemotherapy and recovery

journey.

During treatment, there were some strategies that helped with my wellbeing -

Maintaining contact – I remember making a video call from the hospital two days after my surgery. Children made little gifts/cards to take to the hospital which I showed them.

I answered questions about my stay at the hospital and spoke about the wonderful jobs that health professionals in the hospital do to help us get better.

Honest, age-appropriate responses – I did my best to give answers regarding my illness. I acknowledged the children's feelings and talked about their emotions. An example was from a pattu who let all her peers know that her mum suffered from cancer too, just like Paru.

Connecting With Children – Video calls was a wonderful way to stay in touch with my pattus. On days that I was not sick, I would connect with pattus to read a book, sing a song or share something interesting. This was our time. Pattus would share their stories and inform me about everything that was important to them. One pattu cut her wonderful long hair as she said to her mum that I will need it for a wig when she came back to kinder.

Ask and receive support - Every video session ended with children sending hugs and love. Something that I needed and asked from the children to keep me going on rough days. Some kinder families supported by dropping food outside my home, which I am truly grateful for.

Connecting With Families – I kept in touch with families and informed them about my progress. Families responded positively and empathetically. A few times, it was good to see them when they came to kindergarten for special occasions and be part of the video call.

Connecting With Community- I informed children about the need for a facelift in the Chemotherapy Unit in the hospital. Children contributed art works and artefacts that I gave to the wonderful nurses who displayed them kindly to help bring some solace to patients.

Adversity Brings Opportunity- I put together an exhibition celebrating the wonderful life of some senior community members who visit my kindergarten every week. This group of grandmas had amazing stories to share about their life for children, families and community to see, enjoy and learn from. This helped me immensely during chemotherapy cycles to focus on the possibilities for

NOW rather than the uncertainty of the FUTURE.

Learning Something New – To keep my fingers moving during chemotherapy, I started learning Parai – a traditional drum from Tamil Nadu, India. I shared this news with my kinder pattus and showed them some beats during one of our video calls. Pattus used clapsticks to follow the beats at kinder.

Six months later, I returned to kinder. It felt like I was always there. Nothing had changed, except when I asked pattus to sit on the mat, they would face the side where the laptop used to be when I made the video calls, even though I was there on the couch in front of them!

"If we try to secure the wellbeing of others, we will at the same time create the conditions for our own." – Dalai Lama.

Family, friends and my community continue to teach me to learn and unlearn the meaning of wellbeing for which I am truly grateful, as a cancer survivor.



ஆவூரான்

# அழைப்பிதழ்

மேசையில் பல கொண்டாட்ட நிகழ்வுகளின் அழைப்பிதழ்கள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. நாளை மறுதினம் நடக்க இருக்கும் பூப்புனித நீராட்டு விழா. அதற்கான ஆயத்தங்கள் எங்கள் வீட்டிலும் தொடங்கி விட்டது.

இந்த நிகழ்வு மிகவும் நெருங்கிய நண்பரின் பிள்ளைகளுக்கு இல்லை. ஒரு நாளும் வீடுவாசலுக்கு வந்தும் போனவர்கள் இல்லை. இது மண்டபத்துக்கு மட்டும் நடக்கும் விழாவுக்கு அழைக்கப்பட்டவர்கள்.

நெருங்கிய நண்பரின் பிள்ளைக்கோ அல்லது உறவினருக்கோ என்றால் அது வேற மாதிரி ( வேற மாரி)

" இஞ்சருங்ககோ"

"இஞ்சருங்ககோ"

ஐயோ மனிசி கூப்பிட்டிட்டுப் போட்டாள்,,,,,

இல்லை... இல்லை போட்டா

( கொஞ்சம் இருங்கோ வாறன்)

இந்த "இஞ்சருங்கோ" வுக்கு என்ன அர்த்தம் எண்டு விளங்கவில்லை .

இது ஒரு வித்தியாசமான ரிதத்தில ஒரு வித ராகமாக இருக்குது. இவ்வளவு நாளும் கூப்பிடும் ஓசை நயம் இப்ப கூப்பிட்டதில இல்லை...

அவள் கூப்பிட்ட ஒரு நிமிடத்திலிருந்து பல அகராதிகள் எல்லாம் ஓடி மனத்திரையில் அர்த்தம் தேடியும் கண்டு பிடிக்க முடியாமல் இளையராஜாவை அழைத்து அவள் கூப்பிட்ட ரிதத்திற்குப் பாடிக் கொண்டு அவள் அருகில் போனேன்.

" இஞ்சருங்கோ இந்தச் சாறிதான் சாமத்திய வீட்டுக்குக் கட்டப் போகிறேன். இந்தத் தாவணியைச் சுருக்கி மடிக்க வேண்டும். உதவி செய்யுங்கோ"

கல்யாணம் கட்டிய புதிதில் மனைவி சாறி கட்டும்போது நான் அறைக்குள்ளே நிற்கக் கூடாது. இரண்டு பிள்ளைகள் பிறந்து வளர்ந்து, அதுகள் யூனி போகுதுகள் என்றால் மனைவிமார் கணவன்மாரை வெருட்டி ஆளுறதில இலங்கை மனைவிமார் அதி புத்திசாலிகள்தான். இது என் அனுபவம். அதால நான் இப்ப அடங்கித்தான் போறனான். வடிவா பிடியுங்கோ சாறி வழுவிப் போகுது. இனி நீங்க தான் அயன் பண்ண வேணும்.

**9.30க்கு தண்ணி வார்ப்பு 10.30க்கு** பிள்ளை மண்டபத்துக்கு வந்திடும். சரியான நேரத்துக்குப் போகவே வேண்டுமாம். எல்லாத் திட்டங்களும் இரவு சொல்லிப்ப போட்டுத்தான் உறங்கப் போனாள்.

விடியற் காலை தாயும் மகளும் எழும்பிக் காலைக் கடனை முடிக்க மனைவி என்னைத்தான் தேநீர் போடச் சொன்னா. தேநீர் போட்டதும் தலைக்கு டை (மை) அடிச்சு விடச் சொன்னா. அவா கதிரையில குந்திக் கொண்டிருக்க ஒவ்வொரு கோடுகோடாக எடுத்து கையில கையுறை போட்டு கொஞ்சம் கொஞ்சமாகப் பூசி விட வேண்டும். அவவுக்கு பூசி முடிய என்னையும் வைக்கச் சொல்லுவா?

எனக்குத்தானே 55 வயதைத் தாண்டிப் போச்சு. எனக்கு வேண்டாம் என்றால் தன்ர நண்பிகளின் கணவன்மார் மீசைக்கும் தலைக்கும் டை அடித்து எப்படி வருகிறார்கள். நீங்களும் அடித்தால்தானே சனம் என்னையும் சோடியாகப் பார்க்குங்களாம்.

மனுசியும் குளித்து முடித்து வந்து விட்டா.

சாறி கட்டத் தொடங்கி தாவணிக்கு ஊசியும் குத்திப்போட்டு, நான் தலைக்கு டையும் வைத்து ஊறிய பின்பு நான் குளித்து முடிய, பொடியனும் குளிக்கப் போய்விட்டான்.

நான் சும்மா எட்டிப் பார்த்தேன். மனிசி இன்னமும் கண்ணாடிக்குப் பக்கத்தில தான் நின்று கொண்டிருந்தாள்.

பெடியனும், பெட்டையும் காலைச் சாப்பாடு வேண்டும் என்றார்கள், முட்டையை உடைத்து ஊற்றி, பாண் துண்டுகளை முட்டை மேலே வைத்து மிளகு தூளும்,உப்பும் தூவிப் போட்டு ரீ உடன் கொடுத்து விட்டு, முட்டை மணம் போகக் கையைக் கழுவி விட்டு, வேட்டியை

கட்டினேன். இனி சங்கிலி, மோதிரம், கைச் சங்கிலி எல்லாம் போட வேண்டும் என்று என்னைக் கட்டாயப் படுத்திப் போட வைச்சுட்டா.

இவற்றைப் போட்டுக் கொண்டு போனால்தான் மற்றவர்கள் எங்களைப் பார்ப்பார்களாம், மதிப்பார்களாம்.

நான் இப்போது தயாராக இருக்கிறேன், காரையும் போய் ஸ்ரார்ற் செய்து ஏசியையும் போட்டு நீண்ட நேரமாக குந்திக் கொண்டிருக்கிறேன். மனைவியும் மகளும் வந்தபாடில்லை .

கணநாதன் ஐயா எழுதிய " நிம்மதியைத் தேடி" என்ற சிறுகதைப் புத்தகம் காரினுள்தான் இருந்தது. அதை எடுத்து வாசித்தேன்.

முதலாவது பயணக்கதை சுவாரசியமாக இருந்தது. அதோடு என் நினைவுகளும் கூடப்போகும்போது மகள் காரில் வந்து ஏறி விட்டாள்.

இனித் தாய்க் கிழவி வரும் என்று பார்த்தால்

"வீட்டைப் பூட்டவோ போன் எடுக்கவோ உதவலாம் அல்லே... வந்து காறில் ஏறி இருந்திட்டியள்."

"சிவனே மனைவிக்கு நீ பாதி உடல் கொடுத்து எங்களை பாவியாக்கி விட்டாயே ."

நான் கதவையும் பூட்டி, போனையும் எடுத்து, காரையும் ஒட்டிப்போய் மண்டபத்தின் உள்ளே போனால் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருக்கைகளில் சிலர் மட்டும் இருந்தனர். நான் மனைவியை ஒரு பார்வை பார்க்க மேசையில் இருந்த மிக்சர் கோப்பையை என் அருகில் தள்ளிவிட்டு எடுத்துச் சாப்பிடச் சொல்லி கண்ணால் பேசினாள். உடனே எதுவும் பேசாமல் சாப்பிட்டேன்.

55 வயதானால் மனைவி சொல்லைக் கேட்கணுமாம்.

சாமத்தியப்பட்ட பிள்ளை லீமோ வாகனத்தில் இருந்து சிறுமிகள் பலர் சின்ன விளக்குகளோடு முன்னே வர பிள்ளை மெதுவாக நடந்து மேடைக்கு வர புஸ்வானம் இரண்டு பக்கத்திலும் மேலெழும்பி அடங்கி முடிய மேடையில் பிள்ளை நிற்க ஆறு சோடிகள் போய் ஆராத்தி எடுத்தனர். சிலர் ஆராத்தித் தட்டத்தை இடமும் வலமுமாக இழுப்பதையும் ஒருவர் மேலையும் மற்றவர் கீழே இழுப்பதையும் பார்க்க "ஐயோ என்ன இது நாம ஒரு கொம்பனி தொடங்கினால் ஆராத்துவது எப்படி என்று ஒரு பயிற்சி நிறுவனத்தை நடத்தலாம்போல. காசும் பார்க்கலாம்." மனம் கணக்குப் போட்டுது.

ஏன் ஆண்கள் கூட ஆராத்தி எடுக்கலாமே, இது சம்பந்தமாக நானும் நண்பர்களும் பேசிப் பார்த்தோம். இதை ஒரு விவாதமாகப் பேசலாம் என்று முற்பட்டபோது அப்போதும் மனைவி என்னைக் கண்களால் பேச எத்தனித்ததும் நான் அடங்கி விட்டேன்.ஏன் என்றால் 55 வயதை தாண்டிய பின்பு எல்லாம் அடக்கி வாசிக்க வேணுமாம்.

சாப்பாட்டுக்கு ஒரு வரிசையும் போட்டோ எடுக்க ஒரு வரிசையும் போகிறபோது சாப்பிடுவம் என்று நானும் மகளும் போய் நிற்க, விழாவுக்கு வந்து மேசையில் இருந்தவர்களில் சிலர் மண்டபத்தின் வாசலில் மலரால் அலங்காரம் செய்யப்பட்ட வளைவுக்கு முன்னால் நின்று போட்டோ எடுக்கத் தொடங்கி விட்டார்கள். என்ர மனைவியும், கவிதாவும்,தயாக்காவும் சேர்ந்து எழுந்து மண்டபத்தில் போய் நின்று ஒருவரை ஒருவர் மாறி மாறிப் போட்டோ எடுக்கத்

தொடங்கினர். என் மனைவி என்னைப் பார்க்கவே எனக்கு விளங்கி விட்டது.

“ஐயோ நான் போட்டோ எடுக்க வேணும். அதை உடனே அவர்களுக்குக் காட்ட வேணும்”

அப்படி எடுத்திருக்கலாம், போனைச் சரியாமல் எடுக்க வேணும், கால் தெரியவில்லை , சாறி வழுகி இருக்கு சொல்லியிருக்கலாமே ” என்று ஆயிரம் காரணம். “ உன்ர புரியனுக்கு போட்டோ எடுக்கத் தெரியாது என்று தயா அக்கா சொல்ல நான் முறைத்துப் பார்க்க என்னதான் நடக்குமோ. போய்ப் போட்டோவும் எடுத்தாச்சு. மேடையில் சாமத்திய பிள்ளையோடு படம் எடுக்கப் போக மனைவி யாரைத் தேடுறா என்று தெரியுமோ. தன்ர போனிலையும் போட்டோ எடுக்கத்தான்.

போட்டோ எடுக்க எவ்வளவு விலையுயர்ந்த கமராக்களை வாங்கி அதற்காகவே படித்து எத்தனையோ விதமாகப் போட்டோ எடுக்கிறார்கள்.

புகைப்படக் கலை (கலைஞர்கள்) என்று எவ்வளவு மரியாதையாக ஒரு தொழிலாக இருந்து வந்த போட்டோ எடுப்பதை இந்தப் போன் வந்த பின்னால் இந்தச் சனம் படுகிறபாடு. போனைக் கண்டு பிடிச்சவன் இந்தக் கமராவை அதில் வைக்காமல் இருந்திருக்கலாம். போனுக்குள் கமரா இருக்கிறதால எவ்வளவு சீர் கேடுகளும் நடக்குது.

“இஞ்சருங்கோ... என்ன யோசிக்கிறீர்கள்.? வாங்கோ சாப்பிடுவம் சாப்பாட்டைக் கொண்டு வந்து வைத்ததும் அதையும் படம் எடுக்கிறார்.

நான் தலையில் கை வைக்கப் போக ஒரு பார்வை பார்த்தாள். காளி அம்மன் கோலம் வந்து போனது. மௌனமாகவே எல்லோரும் வீட்டுக்கு வந்தோம்.

அப்பாடா ஒரு பூப்புனித நீராட்டுவிழா முடிந்து விட்டது.

மரக்கறிச் சாப்பாடு ஒரு சோம்பலை தர வீட்டுக்குள்ள போய் கொஞ்ச நேரம் தூங்கலாம் என்று போக “ இஞ்சருங்கோ இந்தச் சாறியின் ஊசியை களட்டி விடுங்கோ...

“வாற சனிக்கிழமை ஆற்ற கலியாண வீடு என்று தெரியுமல்லோ”.

“கலியாண வீடா...?”



ஜேகே

# முக்குழி அப்பம்

**படங்கள் : ஜீவிகா**

தேங்காய்ச் சிரட்டை ஒன்று தும்புகள் எல்லாம் நீக்கப்பட்டு, அதன் கண்களும் அகற்றப்பட்டுத் தயாராக வைக்கப்பட்டிருந்தது.

இப்ப இந்தச் சிரட்டைல மூன்று குழிகள் இருக்கல்லா? அதாலதான் முக்குழி எண்ட பெயர் வந்தது. இதால மூடி வச்சுச் சுடுறதால இத முக்குழி அப்பம் எண்டு கூப்பிடுவம்.

எங்கள் வீட்டில், வார இறுதிகளில் காலை நேரத்து உணவாகப் பல தடவைகள் முக்குழி அப்பத்தை அம்மா சுட்டுக் கொடுத்திருக்கிறார். புட்டு, இடியப்பம், தோசை, உரொட்டிபோல முக்குழி அப்பமும் எங்கள் குடும்பத்தில் அடிக்கடி சமைக்கப்படும் ஒரு உணவு. எங்கள் வீட்டைப் போலவே எல்லா வீடுகளிலுமே இதனைச் சமைப்பார்கள் என்றுதான் சிறு வயதில் நான் எண்ணியுமிருந்தேன். ஆனால் பின்னாட்களில் முக்குழி அப்பம் என்ற பெயரையே பலரும் கேள்விப்பட்டிருக்க வில்லை என்றறிந்தபோது ஆச்சரியமே மேலிட்டது. அம்மாவிடமே கேட்டேன்.

உங்களுக்கு யாரு இதச் சொல்லித் தந்தது? வேற யாரும் இதச் சுட்டுப் பார்த்திருக்கிறீர்களா?

எண்ட அம்மாட்டதான் இதப் பழகினனான். அவ அடிக்கடி வீட்டில செய்வா. மற்றபடி வேற வீடுகளில முக்குழி அப்பம் சுட்டு நான் கேள்விப்பட்டதில்லை.

அப்போது அப்பா இடையில் புகுந்தார்.

எண்ட அம்மாவும் நல்லாச் சுடுவா. இவையளிண்ட வீட்டு முக்குழி

அப்பத்தைவிட அம்மா சுடுற முக்குழி அப்பம் அந்தமாதிரி இருக்கும்.

அப்பா விட்டால், இந்திரா காந்தியைச் சுட்டதுகூடத் தன் அம்மாதான் என்று உரிமை கோரக்கூடியவர் என்பதால் அவருடைய வாக்குமூலத்தை நம்பலாமா என்று எனக்குத் தெரியவில்லை. எது எப்படியோ முக்குழி அப்பம் என்கின்ற உணவை யாழ்ப்பாணத்தின் ஒரு மூலையில் உள்ள சிறு தீவான நயினாதீவில் வாழ்ந்த சில குடும்பங்கள்தான் சமைத்து வந்திருக்கின்றன என்பது ஊர்ஜிதமாகிறது. அதிலும் குறிப்பாக இன்றைய தேதிக்கு முக்குழி அப்பத்தை வீட்டில் சமைத்துச் சாப்பிடுகின்ற ஒரே நபர் என்னுடைய அம்மாதான் என்கின்ற



அளவிலே முக்குழி அப்பத்தின் செயன்முறையை ஆவணப்படுத்தவேண்டும் என்ற முனைப்பும் எனக்குள் உருவானது. அதை நான் அம்மாவிடமே சொல்ல, அவருக்கும் உற்சாகம் தொற்றிக் கொண்டது.

கோதுமைதான் பாவிக்கோணும். பச்சைக் கோதுமை மா. அதில ஒரு சுண்டை எடுத்து கொஞ்சம் உப்பும் போட்டு, பச்சைத் தண்ணி விட்டுக் கரைக்கவேணும். மிக்சில போட்டு அடிச்சா, கட்டி படாமல் அது நல்லாக் கரைஞ்சு பசுந்தா வரும்.

உங்கட அம்மாவும் மிக்சிதான் பாவிச்சவாவா?

அவண்ட காலத்தில கரண்டே இல்லை. மிக்சிக்கு எங்க போவா? அவ கையாலதான் கரைப்பா.

அப்பா அந்தப் பக்கமிருந்து, நயினாதீவில் முதல் மிக்சி வாங்கியது தன்னுடைய அம்மாதான் என்று அளந்ததை யாருமே கேட்கவில்லை. அம்மா இன்னொரு கிண்ணியில் தேங்காய்ப்பூ பிழிந்து, முதற் பால் எடுத்துத் தயாராக வைத்திருந்தார். அதில் சில கரண்டி சீனியும் சிறிதே உப்பும் சேர்க்கப்பட்டிருந்தது.

இந்தப் பாணிதான் முக்கியம். முதற்பால்தான் எப்பவும் பாவிக்கவேணும். சீனி நல்லாப்போட்டா ருசியும் நல்லா இருக்கும்.

கொஞ்சம் சர்க்கரையும் கலந்தா நல்லா இருக்குமா மாமி?

மனைவி கேட்க அம்மா உடனேயே சொன்னார்.

ஓ. இனிக்கிற எதையும் போடலாம். அந்தமாதிரி இருக்கும்.

விளங்கினமாதிரித்தான். கற்பக தருவிலிருந்து நம் ஊரின் சொத்து நீரிழிவுக்கும் மாரடைப்புக்கும் கை மாறியதில் எந்த ஆச்சரியமுமில்லை.

டயபற்றிக் இருக்கிற ஆக்கள் வேணுமெண்டால் கறியோடையும் தொட்டுச் சாப்பிடலாம்.

உங்களுக்கும் டயபற்றிக் இருக்குத்தானே? கறியோடயா நீங்கள் சாப்பிடுவீங்கள?

எனக்கென்ன விசரா? முக்குழி அப்பத்தை நான் கறியோட சாப்பிடுவனா? இது மத்தாக்களுக்குச் சொல்லுறது.

அம்மா அடுப்பை மூட்டி, சட்டியை

வைத்து ஒரு துளி எண்ணெய் விட்டு அதனை நன்றாகத் துடைத்து எடுத்தார். பின்னர் முக்குழிச் சிரட்டையால் வெறுஞ் சட்டியை மூடினார்.

தாச்சியும் சூடாகவேணும். சிரட்டையும் சூடாகவேணும். அப்பதான் மாவை விடேக்க, இரண்டு பக்கத்தாலயும் சூடு ஏறும். அத்தோட ஒவ்வொரு முறையும் தாச்சியை அடிக்கடி சுத்தமாகத் துடைக்கவேணும். இல்லாட்டி மாவு ஒட்டிப்போயிடும்.

அவர் சிரட்டையைத் தொட்டு சூடு ஏறிவிட்டதா என்று கவனித்தார். சூடு மிதமானதும் சிரட்டையை எடுத்துவிட்டு ஒரு அகப்பை மாவினை சட்டியில் ஊற்றினார். பின்னர் சிரட்டையால் அதனை மூடி வைத்தார்.

இப்ப விளங்குதா? சிரட்டைல முக்குழி இருக்கிறதாலதான் அப்பம் உள்ள நீர்த்துப்போகாமல் நல்லா அவியும். முதல் அப்பம் சிலவேளை சட்டில ஒட்டப்பார்க்கும். பிறகு சட்டியை நல்லாத்துடைச்சிட்டு அடுத்த தடவை ஊற்றும்போது சரியா வந்திடும்.

அவர் சொல்லிக்கொண்டே சிரட்டையைத் தூக்கி அப்பம் அவிந்து விட்டதா என்று பார்த்தார். இரண்டாவது தடவை, சரி வந்திட்டுது என்று சொல்லியபடியே அப்பக் கரண்டியால் அதனை வழித்து எடுத்தார். முதல் முறையே முக்குழி அப்பம் பதமாக, ஒட்டாமல் சட்டியிலிருந்து எழுந்தருளியது.

பார்த்தியா. அப்பத்திலயும் குழியள் விழுந்திருக்கு. மேல வெள்ளையாவும் அடிப்பக்கம் கறுத்தும் இருக்கவேணும்.

பான் கேக்போலத்தானே?

அதேதான். இப்ப சுடச்சுடச் அந்தத் தேங்காய்ப்பால் பாணிக்க இதைப் போடவேணும். பிறகு நல்லா பாணிக்க அப்பத்தைத் தோய்ச்சுத் தோய்ச்சு எடுக்கும்போது பாணி அப்பத்திண்ட குழிகளுக்குள்ள இறங்கி, ஊறி அற்புதமா கலந்துவிடும்.

பிறகு?

பிறகென்ன பிய்ச்சுச் சாப்பிட வேண்டியதுதான்.

நான் அப்பத்திலிருந்து சிறு துண்டைப்




பிய்த்துச் சாப்பிட்டேன். மறுபடியும் இன்னொரு துண்டைப் பிய்த்துத் தேங்காய்ப்பாலில் தோய்த்து எடுத்து வாயில் போட்டேன். மறுபடியும் இன்னொரு துண்டு. விரலிடுக்குகளால் தேங்காய்ப் பால் பாணி வழிந்து கொண்டிருந்தது. வாயிலும்தான். மறுபடியும் ஒரு துண்டு. அம்மா அப்போது அடுத்த முக்குழி அப்பத்தையும் என்னுடைய கிண்ணிக்குள் போட்டார். என் பாட்டி அன்னப்பிள்ளையும்

இப்படித்தான் என் அம்மாவுக்கு சுட்டுக் கொடுத்திருப்பார் என்ற எண்ணமும் கூடச் சேர்ந்தது. ஊரில் இருக்கும் அம்மா வளர்ந்த வீடு ஞாபகத்துக்கு வந்தது. அங்கு அடுப்படியில் அன்னப்பிள்ளை நிற்க, அவருடைய எட்டுக் குழந்தைகளும் அப்பத்துக்காக சமையலறையில் அணி வகுத்து நிற்கும் காட்சி கண்களில் தோன்றியது. தொண்ணூறுகளில், சனிக்கிழமை காலைகளில், டியூசனுக்கு நேரமாகிறது என்று நான் அவசரப்பட, ஒரு வாய்தான் அப்பன், சாப்பிட்டுப் போ என்று முக்குழி அப்பத்தை ஊட்டிவிட்ட அம்மாவின் கரமும் ஞாபகம் வந்தது. ஆவி பறக்க அடுத்த முக்குழி அப்பத்தையும் தேங்காய்ப்பால் வழிய வழிய வாயில் போட்டேன். அப்பா, தனக்கு இன்னமும் அப்பம் வரவில்லை என்று புறுபுறுத்தார். எண்ட அம்மா என்றால் எனக்குத்தான் முதலில் கொடுத்திருப்பார் என்று குறைப்பட்டார். எனக்கு எதுவுமே காதில் விழுவதாயில்லை. மனைவியும் ஒரு கிண்ணியில் தேங்காய்ப்பால் பாணியை விட்டுவைத்துக்கொண்டு தயாராக நின்றாள். ஆனால் நான் நிறுத்தினால்தானே? என் அம்மா சுட்டுத்தந்த முக்குழி அப்பம் குட்டிக் குட்டி நிலவாய் என் சட்டிக்குள் விழுந்து கொண்டிருக்க, நான் அதைப் பிய்த்துப் பிறையாக்கிப் பாலில் தோய்த்து உண்டு பித்தாகிக் கொண்டிருந்தேன். இன்னுமொரு முக்குழி அப்பமும் சட்டியிலிருந்து தேங்காய்ப்பால் பாணிக்குள் விழுந்து என் வாய்க்குள் கரைந்து மறைந்தது. எத்தனை சாப்பிட்டேன் என்று எனக்கே தெரியாது. என் பாத்திரத்தில் தேங்காய்ப்பால் மொத்தமாகத் தீர்ந்தபோதுதான் கொஞ்சம் சுரணை வந்தது. வாயில் இன்னமும் தேங்காய்ப்பாலின் மீதி வழிந்துகொண்டிருந்திருக்கவேண்டும். அம்மாவும் மனைவியும் என் கோலத்தைப் பார்த்துச் சிரித்தார்கள். அரை மணி நேரமாகத் தன் தவணைக்காகக் காத்து நின்ற அப்பாவுக்கு வெறுப்பேறிவிட்டது.

போதும். உமாதேவியாரிட்ட ஞானப்பால் குடிச்ச சம்பந்தரைமாதிரி பால் வடிஞ்சுகொண்டு நிக்கிறாய். போய்த் துடை.

அதைக்கேட்டு, மணியாள் என்கின்ற இராஜேஸ்வரி பெருமிதத்துடன் திரும்பி அடுத்த அப்பத்தை சட்டியில் ஊற்றத் தொடங்கினார்.




# புலம்பெயர் வாழ்க்கையில் நான் கண்ட நன்மை தீமைகள்



சிவயோக ராணி யோகானந்தன்

நான் படிக்கும் காலத்தில் உலகில் மிகச் சிறிய கண்டம் அவுஸ்திரேலியா எனப் படித்த போது "அட அப்படியா" என என் மனதில் ஒரு அதிருப்தி ஏற்பட்டது. ஆனால் இங்கே வந்து கால் பதித்ததும் முன்பு படித்தது மாபெரும் தவறு என நினைக்கும் அளவுக்கு இந்தச் சிறிய கண்டத்தில் இத்தனை விந்தையா? இத்தனை அழகா? எத்தனை எத்தனை புதுமை என நோக்கும் இடமெல்லாம் பச்சைப் பசேல் என்ற வண்ணம் கண்டு வியப்பின் விளிம்பிற்கே சென்று மகிழ்ந்தேன். மிதிக்கும் புல் எல்லாம் பூப்பூக்கும் புதுமையைக் கண்டு பூரித்துப் போனேன். நான் பிறந்த ஊரிலே ஒரு ரோஜாப்பூ மலர்ந்தால் அது எனக்கு உலக சாதனை போன்று தோன்றும். ஆனால் இங்கே திரும்பும் திசையெல்லாம், பார்க்கும் பக்கம் எல்லாம் வண்ண வண்ண எழில் கொஞ்சம் வகையில் இலைகளைத் தோற்கடிக்கும் அளவிற்கு ரோஜா மலர்களின் எழிலும் ஏனைய பல்வகை வண்ண மலர்களின் இணையற்ற அழகும் என் மனதைக் கொள்ளை கொண்ட முதல் விடயமாகும். இத்தகைய நிகழ்வு எனது மனதிற்கும் கண்ணிற்கும் ஒன்று சேர்த்து மிகையற்ற மகிழ்வை உண்டாக்கியது.



மற்றும் மிக முக்கியமாக எமது நாட்டிலே முதுமையோடு இயலாமை, இயங்காமை, தனிமை, பொருளாதாரம் பற்றிய கவலையும் சேர்ந்து கூடவே வாட்டத் தொடங்கும். வாழ்க்கையே கேள்விக் குறியாய் உருவெடுக்கும். ஆனால் இங்கே யாவரையும் விட முதியோரின் தவறாது தவழும் புன்னகை கண்டு வியந்தேன். நடுத்தர வயதினரைவிட முதியோர்தான் சகல வகையிலும் நிறைவாக வாழ்கிறார்கள். ஏனெனில் இந்தப் புலம்பெயர் நாட்டிலே முதியோருக்கான மிக நிறைவான ஒய்வூதியம் கிடைப்பது மிக மிகப்

போற்றிற்குரியது. அத்துடன் வைத்திய வசதிகள், போக்குவரத்து வசதிகள், குடியிருப்பு வசதிகள் போன்றவற்றால் முதியோருக்கான ஒரு உயர்ந்த அந்தஸ்தை அளித்த இந்த புலம்பெயர் நாட்டை பாராட்டாமல் போற்றாமல் இருக்க முடியுமா? எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற கவலையை இல்லாதொழித்து மனதளவிலும் உடலளவிலும் மகிழ்வையும் நிம்மதியையும் அளித்த இந்த புலம்பெயர் நாட்டிற்குத் தலை வணங்குகிறேன்.

மேலும் வீதி ஒழுங்குமுறை என்னைப் பிரமிக்க வைத்தது. நம் நாட்டில் பாதசாரிக்கடவையிலேயே விபத்தை ஏற்படுத்தும் நிகழ்வைச் சந்தித்த எனக்கு இங்கு நடைமுறைப்படுத்தப்படும் வீதி ஒழுங்கு முறையும், பாதசாரிகளுக்கும் துவிச்சக்கர வண்டிகளுக்கும் பிரத்தியேக பாதையும், பாதசாரிக்கடவையில் நாம் நின்றிருந்தால் குறிப்பிட்ட தூரத்தையும் விடப் பல அடி தூரத்துக்கு அப்பால் வாகனத்தை நிறுத்துவதும், நாங்கள் காத்திருந்தால் சைகை காட்டி நாம் போகும்வரை காத்திருந்து செல்லும் மனிதாபிமானம் கண்டு ஆச்சரியமடைந்தேன். மற்றும் அரச பேருந்துகள் ஒரே ஒரு பயணிக்காக என்றாலும் கட்டாயமாகச் செல்லும் சேவையின் மகத்துவத்தை அனுபவத்தை நானும் பெற்றுக் கொண்டேன். பேருந்து நிலையங்களில் காணப்படும் நேர அட்டவணையில் ஒரு நிமிடம் கூட தவறாது சமூகமளிக்கும் உன்னத சேவையை நான் முன்னொருபோதும் எங்கும் எப்போதும் கண்டதில்லை. அனுபவித்ததில்லை. அதேபோன்று புகையிரத நிலையங்களிலும் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு வினாடி கூட தவறாது தாமதிக்காது நடைபெறும் உயர்ந்த சேவையின் ஒப்பற்ற நிர்வாகத்திறன் கண்டு பிரமித்தேன்.

மற்றும் தெரிந்தவர்களோ தெரியாதவர்களோ எங்களைக் கடந்து செல்லும்போது புன்னகை பூத்த முகத்துடன் "ஹலோ" எனக் கூறும்போது பிரிந்திருக்கும் தாய், தந்தை, சகோதரர்கள், உற்றார் உறவினர் நினைவுக்கு வந்து வாடி இருக்கும் பயிர் வான்மழையைக் கண்ட செழிப்பும் மகிழ்ச்சியும் மனதில் ஏற்படுகின்றது. ஒருசில நிமிட நேர மனிதநேயம் மனதில் பல மணி நேரப் பரவசத்தை ஏற்படுத்த ஏதுவாய் இருக்கின்றது. அந்த மகத்தான பண்பு கண்டு வியக்காமல் இருக்க முடியுமா?

முக்கியமாக வைத்தியசாலையில் இலவச சிகிச்சையைத் தந்து நோயாளிகளைக் கவனிக்கும் திறன் நம்மை மெய்சிலிர்க்க வைத்தது. ஏனெனில் இத்தகைய கவனிப்பு பல லட்சம் கொடுத்தும் நாம் முன்னொரு போதும் கண்டதில்லை. அனுபவித்ததில்லை. எந்த புகழ்பெற்ற வைத்தியரானாலும் காத்திருக்கும் நோயாளியை அவரே வந்து கூட்டிச்செல்லும் மனிதப் பண்பு கண்டு மெய்சிலிர்த்தேன். சேவையில் உள்ளவர்களின் கனிவான பேச்சு, இதமான பராமரிப்பு, புன்னகை சிந்தும் முகம் கண்டு பூரித்துப் போனேன். அவசர சேவைக்குப் பயன்படும் அம்பியுலன்ஸ் சேவையின் துரித செயல்பாடு, முதலுதவி, சிகிச்சைச் சிறப்பு கண்டு மனிதாபிமானம் உள்ள எவராலும் பாராட்டாமல் வியக்காமல் இருக்க முடியாது.

ஆனாலும், அவசரத்துக்கு வைத்தியரின் சிபாரிசு இன்றி எந்த மருந்தும் மருந்துச்சாலைகளில் வாங்க முடியாது. அந்த விடயம் மனதுக்கு அதிருப்தியை ஏற்படுகிறது. ஏனெனில் முன்பு நாங்கள் அப்படிப் பழக்கப்படவில்லையே. மேலும்

முக்கியமாக நோயின் நிமித்தம் வைத்தியர் சிபாரிசுடன் மருந்து வாங்கச் சென்றால், ஐந்து நாட்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தென்றாலும் அதற்கு ஏற்றாற்போல் கொடுக்காது 10 அல்லது 20 உள்ள மாத்திரைப் பெட்டிகளைத் தருவார்கள். ஐந்து நாட்களில் நோய் மாறிவிடும். மிகுதி மாத்திரைகள் மாதக் கணக்கில் நிலுவையில் இருக்கும். அவற்றைப் பட்டியல் பெயர் விபரம் எழுதி, பத்திரப்படுத்தி மீண்டும் பல மாதங்களின் பின் பாவிப்பது கஷ்டமும் சிரமமுமே என்பதை உணருகின்றேன்.

சிலசமயம் நாம் விரும்பிய இடத்துக்குச் செல்ல முடியாத இக்கட்டான நிலையம் ஏற்படுவதுண்டு. யாதெனில் வாகன வசதியின்றி அனேகமாக இங்கு வாழ்வது மிக மிகக் கஷ்டமே. வாகன வசதிக்காக குடும்பத்தினரை எதிர்பார்க்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்படும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்படுகின்றோம். அங்கே நாங்கள் விரும்பிய இடத்திற்கு சுயமாகவே சென்று வருவது மனதில் வந்து வாட்டமுற வைத்தது. அங்கே எங்களுக்குக் கிடைத்த பலரது சரீர உதவி, ஒத்தாசை, உபசரிப்பு, இனசன பந்தம் யாவற்றையும் இழந்து “தனிமரம் தோப்பாகாது” என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு மனதுக்குள் பொருமுகிறோம். மேலும் அங்கே சந்தோஷம் எங்கள் இருப்பிடத்தைத் தேடி வந்தது. இங்கே சந்தோஷத்தைத் தேடி நாங்கள் போக வேண்டியுள்ளது. யாவரும் ஒன்று கூடல், உடற்பயிற்சி, பலரும் ஒன்று சேர்ந்து சுற்றுலா செல்லல் ஆகிய நிகழ்வுகள் மூலம் தனிமை வெறுமைக்கு இடமளிக்காது மனதை மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் ஆக்கிக் கொள்ளப் பழகிக் கொண்டோம்.

இந்த நாட்டின் குளிர்காலம் எம்மை மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது. பிறந்ததிலிருந்து மிதமான வெப்ப நிலையையும் அளவான குளிரையும் தாங்கிய நமது உடல் இங்கே ஆயிரம் ஊசியை ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் குத்தியது போன்ற குளிரால் தாக்கப்பட்டுத் துவண்டு விடுகின்றோம். ஆனால் மற்ற நாடுகளைப் போன்று பனிக்கட்டியால் சூழப்படும் இக்கட்டான சூழ்நிலையும் அவற்றை அப்புறப்படுத்தினால்தான் வழியே போக முடியும் என்ற அவல நிலையும் இறைவன் இங்கே அளிக்காதது இந்த நாட்டுக்கே உரிய சிறப்பாகும். குளிரால் துவண்டு போகும்போது நமது உடலையும், உள்ளத்தையும், புலம்பெயர்நாட்டின் பலவித சலுகைகள், வசதி வாய்ப்புகள், இன்னோரன்ன பலவகை காரணங்களும் குளிரைத் துச்சமென நினைத்து நம்மை நிமிர்ந்து நிற்க வைக்கின்றது. இங்கேயே நிரந்தரமாகக் காலூன்ற வைத்துப் பெருமை அடையச் செய்கின்றது.

மேலும் பல்பொருள் அங்காடிகளில் தரம் நிறைந்த பொருட்களும், ஒரு குறிப்பிட்ட தினத்திற்குப் பின்னர் அதன் அரைவாசி விலையில் கொள்வனவு செய்து மகிழும் உன்னத செயற்பாடு கண்டு வியந்தேன். எத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும், சந்தர்ப்பங்களிலும் குறித்த விலைக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடிந்ததை மகிழ்வுடன் சிந்திக்க வைத்தது. ஏனெனில் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பல மடங்கு விலை கொடுத்து வாங்கி பழக்கப்பட்டவர்கள் நாங்கள். வியக்க வைத்த நன்மைகளில், மனதைக் கவர்ந்த விஷயங்களில் இதுவும் ஒன்றாகும்.

சகலவிதமான கடல் உணவுகளும், மரக்கறி வகைகளும், மாமிச உணவுகளும் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தாலும் தாராளமாகக் கிடைத்தாலும் சுவையில் "நம்மூரைப் போல வருமா" முதுமொழி நினைவுக்கு வருகின்றது. "பச்சைத் தண்ணீரில் பதினாறு சுவை உண்டு" என முன் இருந்த சித்தர்கள் சொன்னதுபோல் அங்கு பச்சைத் தண்ணீரைக் குடித்தாலும் சாப்பாடு சமைத்தாலும் அந்த சுவையும் வாசனையும் கோடி கொடுத்தாலும் இங்கே பதனிடப்பட்ட உணவுகளில் கிடைக்காதது கவலையும் ஏக்கமுமே. இழந்ததை நினைக்க இனிக்கத்தான் செய்கிறது. எனது பள்ளிப் படிப்புடன் முற்றுப்பெற்ற எனது எழுத்து பல தசாப்தங்களின் பின்னர் புலம்பெயர் நாட்டிலே தான் மீண்டும் துளிர்விட்டது. என் எழுத்தைப் பல வழிகளாலும் பிரகாசிக்க வைத்ததும் இந்த புலம்பெயர் நாடுதான். பலராலும் என் பெயர் உச்சரிக்கப்பட்டதும் கௌரவிக்கப்பட்டதும் இந்த பொன்னான புலம்பெயர் நாட்டிலே என்று கூறி பெருமிதம் அடைகிறேன்.

கடைசியாக அங்கே உங்கள் இனசன பந்தங்களைக் கண்டு களிப்படைந்த கண்களும் மனமும் இங்கே உள்ள அயலவர்களை ஏக்கத்துடன் பார்த்து மனதுக்குள் வெதும்புகிறோம்.

இருந்தாலும் "சொர்க்கமே என்றாலும் நம்மூரைப் போல வருமா" என்ற வரிதான் நினைவிற்கு வருகின்றது. நமது மொழியின் இனிய நாதம் போல உலகில் எங்கு தேடினாலும் கிடைக்குமா? இனியும் கிடைக்காது. பல்லாயிரம் சலுகைகள் சுகபோகங்கள் வசதி வாய்ப்புகள் இருந்தும் நமது தாய் மண்ணில் கால் பதிக்கும்போது மேற்சொன்னவை யாவும் துரும்பாகத் தெரிவதுடன் அப்போது ஏற்படும் பரவச நிலை ஆயிரம் கோடி கொடுத்தாலும் என்றும் எங்கும் கிடைக்காது எனக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

# ஆஸ்திரேலியாவில் எனது அனுபவம்



சரோஜினி ஆசீர்வாதம்

என் கணவருடனும் என் சிறு குழந்தைகளுடனும் பிறநாட்டில் கணவரின் தொழில் காரணமாக மிக வசதியுடன் பல வருடங்கள் வாழ்ந்து வந்தோம். இறுதியில் ஆஸ்திரேலியா மெல்பேன் நகரத்தை நாடினோம். இதோ என்ன மாற்றம். ஒன்றுமே அறியாத கண்டத்திற்கு உட்பிரவேசித்து தத்தளிக்க நேர்ந்து விட்டேன். இங்கு வாழும் மக்களுடன் இணைந்து வாழ, அவர்களின் பண்பு, கலாச்சாரம், நாகரீகம், தொழில், உணவு, விளையாட்டு போன்றவற்றை அறிந்து கொள்ள எனக்கு மிகவும் கடினமாகத் தோன்றிற்று. அத்துடன் தமிழ் மக்கள் எங்கு இருக்கிறார்கள் என்று அறிய ஆவலாக இருந்தேன். ரோட்டில் நடந்து செல்லும் போது தமிழ் மனிதர் அல்லது தமிழ் பெண் என்று அடையாளம் கண்டு கொண்டால்



அவர்களுடன் பேசி பல விஷயங்களை அறிந்து வந்தேன். மற்றும் பத்திரிகைகள் மூலம் இந்து ஆலயங்கள் அமைந்திருக்கும் இடங்களைக் கண்டறிந்தேன். படிப்படியாக மெல்பேனில் உள்ள சில தமிழ்ச் சங்கங்களை எளிதாகக் கண்டுபிடித்து அச்சங்கங்களுடன் இணையச் சந்தர்ப்பம் கிடைத்தது. என்ன ஆச்சரியம் ஒரு படியாக Berwick மூத்தோர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து விட்டேன். சங்கத்துத் தலைவர் திரு சிவா மிகத் தாழ்மையானவர். அவர் ஒவ்வொரு உறுப்பினருடனும் அன்பாக உரையாடி அவர்களுக்கு முக்கிய இடம் அளிப்பார். இதன் மூலம் நாங்கள் எல்லோரும் ஒரு குடும்பமாகப் பழக இயலுமாக இருக்கின்றது. மாதத்திற்கு ஒருமுறை கூட்டம் நடைபெற்று இசை, நாடகம், பாட்டுக் கச்சேரி, நடனம் போன்றவற்றைக் கண்டு களிக்கலாம். மேலும் திறமை வாய்ந்த பேச்சாளர்களை வரவழைத்து அவர்களின் மூலம் பல விஷயங்களையும் நன்மைகளையும் பெற இயலுமாக இருக்கின்றது. நல்லதொரு சூழ்நிலையாக இந்த சங்கம் அமைந்திருப்பதை நான் நன்றாக உணர்கிறேன். எனக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று தயங்காமல் சொல்வேன். அங்கத்தவர்களுக்கு இலவசமாகக் கொடுப்பதுடன் உணவுக்கு டாலர் ஏழுதான் நாங்கள் கொடுக்கிறோம். மாமிசம், மரக்கறி பொரியல், ரசம், பாயாசம் கிடைப்பதுடன் இடைவேளையில் வடை, கேக், கோப்பி வழங்குவார்கள். சிறு வருமானத்துடன் இச்சங்கத்தை நடத்தி வருவது என்றால் மிக ஆச்சரியமாக எனக்குத் தோன்றுகின்றது. வாழ்க வளமுடன் என்று வாழ்த்தி எனது சிறிய கட்டுரையை முடித்து விடுகிறேன்.

# GOLD CARE MEDICAL CENTRE

medicare
BULK BILLING

## 67 Stud Road, Dandenong

# YOUR LOCAL HEALTHCARE PARTNER IN DANDENONG





## SERVICE OFFERED

- Flu Vaccines Available
- GP Service
- Dermatology Assesment
- Occupational Health Care
- Family Friendly Service

## WHY CHOOSE US?

- BULK BILLING - No Joining Fees
- Care For All Age Group
- Urgent Care Service
- New Patients Welcome

## BOOK NOW

(03) 8726 3855

gcmcd.com.au

SCAN TO BOOK NOW


THE MANGO TREE
Tantalizing your Taste Buds
We are
Catering for
Every Occasion
BIRTHDAY PARTIES, ANNIVERSARIES
WEDDINGS, PUBERTY CEREMONIES
& SPECIAL OCCASIONS
Special Rates availablef for
"ARANGETRAM" FUNCTIONS
WE CAN MATCH ANY GENUINE QUOTE! !
CALL US
(03) 9791 1111 - 0403 058 808
12 CLOW STREET, DANDENONG